இனி இது ரகசியம் அல்ல!

நாளை ஜனாதிபதித் தேர்தல். முன்னைய அனைத்துத் தேர்தல்களுடனும் ஒப்பிடுகையில் இந்தத்தேர்தலில் இதுவரைவன்முறைகள் பெரிய அளவில் இல்லை. அந்த வகையில் So far, So good. ஆனால் அப்படிச் சொல்லி நாம் திருப்திப்பட பக்கம் 02 ❯❯❯

பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஐப்பசி 30 வெள்ளிக்கிழமை 15.11.2019 | கதிர் 10

# நாளை ஜனாதிபதித் தேர்தல் சகல ஏற்பாடுகளும் பூர்த்தி!

## வாக்குப்பெட்டிகள் இன்று காலை வாக்களிப்பு நிலையங்களுக்கு

யாழ்ப்பாணம், நவ 15

8ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான ஜனாதிபதித் தேர்தல் நாளை சனிக்கிழமை நாடு முழுவதும் நடைபெறுகின்றது. என்றுமில்லாதவாறு இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

கடுமையான போட்டிக்கு மத்தியில் மக்கள் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நாளை தமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற இருக்கிறார்கள். பக்கம் 03 ❯❯❯

## வாக்களிக்க ஏற்பாடுகள் செய்து கொடுக்கவில்லை

### இரணைதீவு மக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, நவ. 15

கிளிநொச்சி – இரணைதீவுப் பகுதியில் உள்ளவர்களுக்கு வாக்களிக்கஏற்பாடுகள்செய்து கொடுக்கவில்லை என அப்பகுதிமக்கள்விசனம் தெரி பக்கம் 03 ❯❯❯

## வன்முறைகள் குறைவு!

கொழும்பு, நவ. 15

நாட்டில் கடந்த 2010 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களுடன் ஒப்பிடும்போது இம்முறை பக்கம் 03 ❯❯❯

## 3 இராணுவ ஜெனரல்கள் இன்று திடீர் யாழ் விஜயம்



கோட்டபாயராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்த போது இராணுவத்தில் முக்கிய பதவிகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற பக்கம் 03 ❯❯❯

## 155 துண்டுப் பிரசுரங்களுடன் ஒருவர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, நவ. 15

தேர்தல் தொடர்பான 155 துண்டு பிரசுரங்களுடன் தும்மலசூரிய பகுதியில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை இந்தநபர் கைதுசெய்யப்பட்டார் என்றும் அவர் 27 வயதுடையவர் என்றும் பக்கம் 03 ❯❯❯

## மிலேனியம் சவால் ஒப்பந்தம்: போலிச் செய்திகள் வெளியீடு

### அமெரிக்க அரசு கவலை

கொழும்பு, நவ. 15

மிலேனியம்சவால்நிறுவனத்துடன் இலங்கை செய்துகொள்ளப்படவுள்ள ஒப்பந்தம் தொடர்பில் உண்மைக்குப் புறம்பானபோலிச்செய்திகள் இலங்கை பக்கம் 03 ❯❯❯

## தேர்தலுக்கு முன்பும் பின்பும் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு

### அமெரிக்கத் தூதரகம் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 15

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் ஆர்ப்பாட்டங்களுக்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதால்தமது நாட்டுப்பிரஜைகளை அவதானமாக இருக்குமாறு அமெரிக்கத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

இந்த பக்கம் 03 ❯❯❯

## பொதுமக்கள் வாக்களிப்பதை தடுத்தால் சட்ட நடவடிக்கை!

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், நவ. 15

வாக்களிக்கும்உரிமையைத்தடுப்பதுசட்டவிரோதமான நடவடிக்கையாகும். அவ்வாறு மக்கள் வாக்களிப்பதைத் தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அவர்களுக்கு பக்கம் 03 ❯❯❯

## சமூக வலைத்தளங்களுக்கு தடை எதுவுமே கிடையாது!

கொழும்பு, நவ. 15

எதிர்வரும்நாள்களில், சமூக வலைத்தளங்கள்தடைசெய்யப்படாது எனத்தேர்தல்ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்ததேசப்பிரியதெரிவித்துள் பக்கம் 03 ❯❯❯

## 2 கிலோ கஞ்சாவுடன் இளைஞன் கைதானார்

கிளிநொச்சி, நவ. 15

கிளிநொச்சி – இயக்கச்சி பகுதியில் விசேட அதிரடிப் படையினரால், 1கிலோ 950 கிராம் கஞ்சாவுடன் 20 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார். பக்கம் 03 ❯❯❯

## கைது செய்யப்பட்ட தம்பிராசா எச்சரிக்கப்பட்டு பின் விடுதலை



யாழ்ப்பாணம், நவ. 15

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவை பதவி விலகுமாறு கோரி யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்குமுன்பாகஉண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த பக்கம் 03 ❯❯❯

## மக்கள் அனைவருமே வாக்களிக்கவேண்டும்

### யாழ். தெரிவத்தாட்சி அலுவலர் கோரிக்கை

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறாத வகையில் சுமூகமான தேர்தல் நடத்தப் பக்கம் 03 ❯❯❯




கடைசி சந்தர்ப்பத்தை நழுவவிடாதிருக்க 16ம் திகதி காலையில் அனைவரையும் வாக்களிப்பு நிலையத்திற்கு அனுப்புங்கள்

# கப்பலில் ஹெலியை இறக்கும் பயிற்சி





கடற்படையினரின் கப்பல் ஒன்றின் மேற்பரப்பில் பெல் 412 ஹெலிக்கொப்டர்கள் தரையிறக்கும் கூட்டுப் பயிற்சியில் இராணுவத்தினர் நேற்று ஈடுபட்டனர்.

இலங்கை கடற்படையினர் மற்றும் விமானப்படையினரும் இணைந்து மேற்கொள்ளப்பட்ட இந்த பயிற்சியின்போது கப்பலின் மேற்தளத்தில் 3 ஹெலிக்கொப்டர்கள் தரையிறக்கப்பட்டுள்ளன.

பாணந்துறை ஆழ்கடல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பயிற்சியின் போது ஹெலிக்கொப்டரில் இருந்த நபர்களைக் கப்ப லில் தரையிறக்கும் பயிற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த இராணுவக் கூட்டுப் பயிற்சியின்போது விமானப் படையினரின் தாக்குதலுக்குத் தேவையான ஆயுதங்களைக் கடற்படைக் கப்பல் சிந்துரல மூலம் வழங்கப்படுவதற்கான பயிற்சிகளும் மேற்கொள்ளப் பட்டன..

## நிஹாப் ஆடைகளைத் தவிர்க்கக் கோரிக்கை



ஜனாதிபதித்தேர்தல்வாக்களிப்பின்போது தேர்தல் அதிகாரிகள அடையாளம் கண்டு கொள்வதற்காக முஸ்லிம் பெண்கள் முகத்தை மறைத்து நிஹாப் ஆடைகளை அணியாமல் தவிர்க்க வேண்டும் என்று அகில இலங்கை ஜம்மயத்துல் உலமா கோரியுள்ளது.

உலமாவின் உதவி தலைவர் ஆகர் மொஹமட் இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த விடயத்தில் முஸ்லிம் பெண்கள் அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று அதில் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை மகிழ்ச்சியை ஏற்படுத்தாக சம்ப வங்களைத் தவிர்த்துக்கொள்வதற்காக பெண்கள் வேளைக்கே சென்று வாக்களிக்குமாறும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா கேட்டுள்ளது.

## இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி டெங்கு அபயத்தால் மூடப்பட்டது

வவுனியா, நவ. 15

வவுனியா – இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி நேற்று வியாழக்கிழமை தற்காலிகமாக மூடப்பட்டது.

அந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் சில மாணவர்கள் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து சுகாதாரத் திணைக்களத்தினால் பாடசாலைச் சூழல் அவதானிக்கப் ப ட்டதன் அடிப்படையில் பாடசாலையில் டெங்கு நுளம்பு பெருகும் பகுதிகள் சுகாதாரப் பகுதியினரால் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதனால் அந்தச் சூழலை டெங்கற்ற பிரதேசமாக மாற்ற சுகாதாரச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளதால் நேற்று பாடசாலையை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

## ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் குறித்து நூல் வெளியிட்டவருக்குக் கத்திக்குத்து

கொழும்பு, நவ. 15

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் குறித்து நூலொன்றை வெளியிட்ட ஊடகவியலாளர் இனந்தெரியாதோரின் கத்திக்குத்துக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலியில் இடம்பெற்றுள்ளது.

'வீணடிக்கப்பட்ட அபிவிருத்தியும் ஊழலும், என்ற நூலை வெளியிட்ட லசந்த விஜயரட்ண என்ற சுயாதீன ஊடகவியலாளரே நேற்று இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

அவரது வீட்டுக்குள் நுழைந்த நால்வர் மனைவியின் தலையில் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்திய பின்னர் கத்திக்குத்தை மேற்கொண்டனர் என விஜயரட்ணவின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

அவர்கள் வீட்டின் தளபாடங்களை அடித்து நொருக்கிய பின்னர் அங்கிருந்து வெளியேறினர் எனவும் அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் வெற்றிவாய்ப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் ஊடகவியலாளர் செயற்பட்டார் எனத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் குற்றம்சாட்டினார்கள் எனச் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து விசாரணைகள் இடம்பெறுகின்றன என பொலிஸார் கூறினர். (ஐ)

## 2 லட்சம் வாக்காளர்களுக்கு ஒரு நாள் அடையாள அட்டை

கொழும்பு,நவ.15

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கவுள்ள இரண்டு லட்சம் வாக்காளர்களுக்கு ஒரு நாள் தற்காலிக அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டுள்ளன என ஆள்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்துள்ளார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் முதல் தடவையாக வாக்களிக்க எதிர்பார்த்து, தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்கே இவ்வாறு ஒரு நாள் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஆள் அடையாள அட்டை அடிக்கும் கார்ட் தட்டுப்பாடு காரணமாக




இவர்களுக்கு ஆள் அடையாள அட்டை விநியோகிக்க முடியாமல் போயுள்ளதாகவும் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அடையாள அட்டைகள் தேர்தல்கள் ஆணைக்குழு ஊடாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிக்கு வழங்கப்பட்டு, கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஊடாக விநியோகிக்கப்படுகின்றன எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது. குறிப் பாக ஊடகங்கள் அப்படிக் கூறித் திருத்திப்பட முடியாது என்பதுதான் நிலைமை.

நேரடி வன்முறைச் சம்பவங்கள் குறைந்தாலும் அவற்றுக்கு எல்லாம் சமன் செய்வது போல, இதுவரை காலமும் இலங்கையில் நடந்த அனைத்துத் தேர்தல்களையும் தூக்கிச் சாப்பிட்டு விடும்படியான ஒருவித வேறு வன்முறை இந்தத் தேர்தலில்தான் மிகமிக உச்சமாக இடம்பெற்றிருக்கின்றது என சுதந்திரத் தேர்தல் ஆணையம் மதிப்பீடு செய்திருக்கின்றது.

அது என்ன வன்முறை? ஊடக வன்முறைதான் அது.

இலங்கையின் தேர்தல் சரித்திரத்தில் இத்தகைய மோசமான ஊடகப் பித்தலாட்டத்தைத் தாம் கண்டதேயில்லை என சுயாதீன தேர்தல் ஆணையகத்தின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய கூறியிருக்கின்றார்.

கொழும்பிலிருந்து ஒளிபரப்பாகும் எட்டுத் தொலைக்காட்சி சேவைகளினதும், தேர்தல் செய்தி ஒளிபரப்புத் தொடர்பான மதிப்பீடுகளை நேற்று வெளியிட்டுப் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

*“தேர்தல் சமயத்தில் இரண்டு அரச தொலைக்காட்சி ஊடகங்கள் தேர்தல் தொடர்பான விதிமுறைகளை முற்றாக மீறிச் செயற்பட்டமை மட்டுமன்றி அவை தொடர்பில் தேர்தல் ஆணையம் வழங்கிய வழிகாட்டல்களையும் வேண்டுமென்று உதாசீனம் செய்து நடந்துள்ளன. இந்த விடயத்தை நாம் அப்படியே சும்மா விட்டுவிடுவோம் என்று நினைத்து விட்டார்கள். நாம் சும்மா இருக்கமாட்டோம். தேர்தல் முடிவடைந்ததும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் எதிராகவும் தனித்தனியாகத் தேர்தல் ஆணையம் வழக்குப் போட்டு உரிய நடவடிக்கையை எடுத்துத் தீர்ப்பைப் பெறும். சம்பந்தப்பட்ட இரு அரச தொலைக்காட்சி நிறுவனங்களும் தப்பிவிட இடமளிக்க மாட்டோம்.”* – என்று கூறியிருக்கின்றார் பிரதம தேர்தல் ஆணையர்.

கொழும்புத் தொலைக்காட்சி ஊடகங்கள் என்று மட்டுமல்ல, இங்கும் அச்சு ஊடகங்கள் உட்பட அனைத்தும் இப்படித்தான்.

ஊடகவியலாளனான எனக்கே அந்த அனுபவம் உண்டு. ‘உள்ளதைக் கெடுத்தானாம் நொள்ளைக் கண்ணன்’ என்பது போல – ஒரு கூட்டத்தில் நான் ஒரு சாரப்பட பேச, என்னுடைய பேச்சின் ஒரு பகுதியை வெட்டி ஒளிபரப்பி, நான் பேசிய நிலைப்பாட்டுக்குக் தலைகீழான கருத்தை பிரதிபலிக்கச் செய்தது இங்குள்ள ஓர் ஊடகம்.

இந்தச் சம்பவத்தைப் பார்க்கும் போது அறுபதுகளில் நடந்த ஒரு பத்திரிகைச் சமர் நினைவுக்கு வந்தது. யாழ்ப்பாணம் கூட்டத்தில் குன்றக்குடி அடிகளார் பேசிய ஒரு பேச்சு சம்பந்தமாக ‘வீரகேசரி’‘தினபதி’ பத்திரிகைகளிடையே அச்சுப்பிரசுர மோதல் வெடித்தது.

*‘குன்றக்குடி அடிகளார் நஞ்சுண்ட காதை’* என்ற பெயரில் அந்த சர்ச்சை நீடித்தது.

ஒரு கட்டத்தில் குன்றக்குடி அடிகளாரின் யாழ் பேச்சின் ஒரு பகுதியை மட்டுமே – தனக்குச் சார்பான பகுதியை மட்டுமே – பிரசுரித்த ஒரு பத்திரிகையை மற்றப் பத்திரிகை அதற்காக ஒரு பிடி பிடித்துக் கொண்டது.

*“குன்றக்குடி அடிகளாரின் யாழ் பேச்சில் முண்டத்தை மட்டும் பிரசுரித்த ‘இன்ன’ பத்திரிகை நிறுவனம் முழுவதையும் பிரசுரிக்குமா?”* – என்று பகிரங்க சவால் விடுத்துக் கேள்வி எழுப்பியது மற்றப் பத்திரிகை.

எனக்கும் வேறு வழியில்லை. “என் பேச்சில் முண்டத்தைப் பிரசுரித்த ‘இன்ன’ நிறுவனம் எனது பேச்சை முற்றாகப் பிரசுரிக்குமா?” – என்றுதான் நான் சவால்விட வேண்டும். ஆனால் விடமுடியாது. ஏனென்றால் ஊடக நிறுவனம் என்ற முறையில் அதுவும் எமக்கு மிகவும் வேண்டியதே.

‘மாமியார் முந்தானை விலகினால் சுட்டிக் காட்ட முடியாது’ என்பதுபோல எனது பேச்சையே தன்னுடைய நிலைப்பாட்டுக்கு ஏற்ப வெளிப்படுத்திய அந்த நிறுவனம் எங்களைப் பொறுத்தவரை மாமியார் போன்ற உயர்ந்த ஸ்தானத்தில் மதிக்கப்படுவதுதான். எனவே முந்தானை விலகியமையை நாம் சுட்டிக்காட்ட முடியாததுதான்.

ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் பேசாத விடயத்தையே பேசியமை போல துணிந்து செய்தியாக வெளியிடும் பத்திரிகைகள், ஊடகங்கள் கொழும்பில் இருக்கும்போது இங்கு நிலைமை தேவலை என்றே தோன்றுகின்றது.

ஊடக தர்மத்துக்கு மாறான போக்கு தமிழ் ஊடகங்களில் கொஞ்சம் குறைவுதான். இதில் தென்னிலங்கைச் சிங்கள ஊடகங்கள்தாம் கொடிகட்டிப் பறக்கின்றன.

சுமந்திரன் பேசாத பேச்சைப் பேசினார் என்று சாரப்பட செய்தி வெளியிட்ட பத்திரிகைகளின் செய்திகளுக்குப் பொறுப்பான ஆசிரிய பீட அலுவலர்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருக்கின்றார்கள் என்று கேள்வி.

நிர்வாகம் தனது அரசியல் நிலைப்பாட்டுக்கு ஏற்ப செய்திப் பிரிவுக்குள் தலையிட்டு செய்திகளைச் சோடித்துப் பிரசுரித்து விட்டுப் போய்விட்டது, இப்போது நாங்கள் அல்லவா பொறுப்புக் கூற வேண்டும்? – அதுவும் சட்டத்துறை ஜாம்பவானான சுமந்திரனையே நீதிமன்றத்தில் எதிர்கொண்டு சமாளிக்க வேண்டும் என்ற நெருக்கடி அந்த ஆசிரியபீட அலுவலர்களுக்கு.

அரசியல் லாபத்தை எட்டுவதற்காக ஓர் இனக்குரோதக் கலவரத்தையே உண்டு பண்ணக் கூடிய வகையிலான ஒரு செய்தியை சுமந்திரனின் பெயரில் இட்டுக்கட்டி முதலாம் பக்கத் தலைப்புச் செய்தியாக – அதுவும் தேர்தல் பிரசாரச் செய்திகளைப் பிரசுரிப்பதற்கான கடைசி நாளன்று ‘பிளான்’ பண்ணி விதைத்த விடயத்தை சுமந்திரன் சும்மா விட மாட்டார் என்று எதிர்பார்க்கலாம். சம்பந்தப்பட்ட நிறுவனத்தைப் பொறுத்தவரை – இத்தகைய சட்ட விடயங்களில் நான் அடிக்கடி கூறுகின்றமை போல, இந்த இட்டுக்கட்டின செய்தி விவகாரம் ‘காலைச் சுத்திய பாம்புதான்’. அது சீண்டாமல்விடாது...! பொருத்திருந்து பார்ப்போம் என்ன நடக்கின்றது என்று...!

–மின்னல்–

காலைக்கதிர் Kalaikathir
வெள்ளிக்கிழமை 15.11.2019 03

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும்பூர்த்தியாகியுள்ளன எனத் தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

வாக்களிப்புநிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள் இன்று காலை 7 மணி முதல் எடுத்துச் செல்லப்படவுள்ளன.

நாளை காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மக்கள் வாக்களிப்பு நேரமாகும். வழமையாக மாலை 4 மணியுடன் முடிவடையும் வாக்களிப்பு இம்முறை ஒரு மணி நேரம் நீடிக்கப்பட்டு 5 மணி வரை இடம்பெறவுள்ளது.

மாலை வரை நேரம் இருப்பதாக எண்ணிக்கொண்டு தாமதப்படுத்தாமல் காலையிலேயே வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்றுவாக்களித்துவிட்டுஅமைதியாக வீடுதிரும்பவேண்டுமென்று தேர்தல்கள் ஆணைக்குழுவும் பொலிஸ் திணைக்களமும் அறிவுறுத்தல் வழங்கியிருக்கின்றன.

முடிந்தவரை அமைதியைக் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தலுக்காக நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன. வாக்காளர்கள் அச்சமின்றி வாக்களிப்பதற்கான சூழல் உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழுஅறிவித்திருக்கின்றது.

அனைத்து மக்களும் தமது வாக்குரிமையைக் கட்டாயம் பயன்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வன்முறைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறவுள்ள தேர்தலுடன் தொடர்புடையவன்முறைகள்குறைவாகவே பதிவாகியுள்ளன என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது 4 கொலை சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன.

எனினும் இம்முறை அவ்வாறு கொலை சம்பவங்களோ அல்லது பாரிய வன்முறைகளோ பதிவாகவில்லை என்றும் பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

கொலை, கூரிய ஆயுதத்தில் தாக்கி காயப்படுத்தல், தாக்குதல், கடத்தல், குண்டு வெடிப்பு, துப்பாக்கிச் சூடு, துப்பாக்கி முனையில் அச்சுறுத்தல், சொத்துக்களைச் சேதப்படுத்தல் மற்றும் அரசியல் கட்சி காரியாலயங்களைச் சேதப்படுத்தல் போன்ற பாரிய வன்முறைச் சம்பவங்கள் இம்முறை குறைவடைந்துள்ளன.

மேற்கூறிய குற்றங்களுடன் தொடர்புடைய சம்பவங்கள் 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 502உம் 2015 ஆம் ஆண்டு 190 உம், இவ்வருடம் 68 உம் பதிவாகியுள்ளன. (ஐ)

## 2 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமராட்சி கிழக்குக் கோவில் பகுதியில் இருந்து வெளிமாவட்டத்திற்குக் கஞ்சாவைக் கடத்த முற்பட்டபோதே இந்த இளைஞன் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டுள்ள இளைஞன்கட்டைக்காடு – கோவில்வயல் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் அவரிடம் இருந்து 1 கிலோ 950 கிராம்கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் கைது செய்யப்பட்ட இளைஞன் பளைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளான். மேலதிக விசாரணையைப் பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வாக்களிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளனர்.

2017ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி அந்தப் பகுதியில் குடியேறியிருந்த மக்கள் முதன் முறையாக இம்முறை இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க இருந்தனர்.

இருப்பினும் தங்களுக்கு இம்முறை தேர்தலில் வாக்களிக்கச் சிறப்பு ஏற்பாடுகள் செய்து கொடுக்கவில்லை என அவர்கள் விசனம் வெளியிட்டனர்.

அவர்கள் இரணைமாதா நகருக்கு சென்றே வாக்களிக்க வேண்டிய நிலை உள்ளபோதும் அவர்களுக்கான படகு வசதிகளோ வேறு எந்த வசதிகளோ செய்து கொடுக்கப்படவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

யுத்தம் இடம்பெறுவதற்கு முன்னர் இரணைதீவுப் பகுதியில் வாக்களிப்பு நடைபெற்றது. குறிப்பாக கடந்த காலங்களில் வானூர்தியில், படகுகளில் வாக்குப் பெட்டிகள் கொண்டுவரப்பட்டு தேர்தல் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேர்தலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயம் தொடர்பாக அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பின்னர் விடுக்கப்பட்ட 2ஆவது நிலை பயண ஆலோசனையில் எந்த மாற்றமும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

பெரிய கூட்டங்கள் அல்லது ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடங்களுக்கு அருகில் இருப்பவர்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும், சுற்றுலா தளங்கள் மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பொது இடங்களுக்குச் செல்லும்போது அவதானமாக இருக்குமாறும் தூதரகம் கேட்டுள்ளது.

அத்தோடு உள்ளூர் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறும் உள்நாட்டு ஊடகங்களைக் கண்காணித்து, புதிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளைச் செய்யுமாறும் தூதரகம் கேட்டுள்ளது. (ஐ)

## 155 துண்டுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)'

பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்டவரிடம் 30 தபால் உறைகள் கைப்பற்றப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## பொது மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் என்.வேதநாயகன் எச்சரித்துள்ளார்.

தேர்தலைப் புறக்கணிக்குமாறு செய்யப்படும் பிரசாரங்கள் குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தலைப் புறக்கணிக்குமாறு கோரிப் பிரசாரம் நடந்ததாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கவில்லை. அவ்வாறு பிரசாரம் செய்யப்பட்டால் அவர்களுக்கு எதிராகக்கடுமையானநடவடிக்கை எடுக்கப்படும். வாக்களிக்கும் உரிமை மக்களுக்குரியது. அதனைத் தடுக்கும் உரிமை எவருக்கும் இல்லை. அது தனிமனித உரிமை மீறலும் கூட – என்றார்.

# வாக்குகள் எண்ணப்படும் பாடசாலைகள் விவரம்

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதும் உள்ள அனைத்துஅரசபாடசாலைகளும் இன்று மூடப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது

பாடசாலைகள் வாக்களிப்பு நிலையங்களாகவும், வாக்கு எண்ணும் மையங்களாகவும் பயன்படுத்தவுள்ளமையால், தேர்தல் ஆணையம்கோரியதைத்தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, அனைத்து பாடசாலைகளும்நேற்றுப்பாடசாலை நேரத்திற்குப் பிறகு அவ்வப்பகுதி கிராமசேவையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன என்று அந்த அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது.

நவம்பர் 16 அச்ம் திகதி ஜனாதிபதித் தேர்தல் வாக்கு எண்ணும் மையங்களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகளின் விவரம் பின்வருமாறு:–

கொழும்பு–டிஎஸ்.சேனநாயக்க கல்லூரி, றோயல் கல்லூரி, கம்பாஹா–பத்தலகேதர்வித்யலோகா மகா வித்யாலயம், களுத்துறை வடக்கு – முசாயஸ் கல்லூரி, கண்டி – மொடல் பாடசாலை, மாத்தறை – கிறிஸ்ட் சேர்ச் கல்லூரி, நுவரெலியா – காமினி தேசிய கல்லூரி, மாத்தளை – சுஜாதா வித்யாலயம், காலி – புனித அலோயஸ் கல்லூரி, ஹம்பாந்தோட்டை – சுவிதேசியபாடசாலை,யாழ்ப்பாணம். – மத்திய கல்லூரி, மட்டக்களப்பு – இந்துக்கல்லூரி, குருநாகல்–சேர் ஜோன் கொத்தலவல கல்லூரி, மலியதேவ ஆண்கள் கல்லூரி, புத்தளம் – சென் ஆண்ட்ரூஸ் மத்திய கல்லூரி, பாத்திமா பாலிகா மகா வித்யாலயம், ஷீனன் ஆரம்பப்பாடசாலை, அனுராதபுரம் – மத்திய கல்லூரி, பதுளை – மத்திய கல்லூரி, விசாகா பெண்கள் உயர்பாடசாலை, மொனராகல – ரோயல் கல்லூரி, கேகாலை – ஸ்வார்ணா ஜெயந்தி மகா வித்யாலயம் , கேகாலை – பாலிகா வித்யாலயம்.

## சமூக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வி.பி.என். தயார் நிலையில் வைத்துக் கொள்ளுமாறு குறிப்பிடப்படடிருந்து. நான் பார்த்தேன். அது பொய். அப்படி ஒன்றும் இல்லை. எனினும் அந்த இடத்திற்கு எம்மைக் கொண்டு செல்ல வேண்டாம். சமூக வலைத்தளங்களில் பதியப்பட்டுள்ள விளம்பரங்களை நீக்குமாறு அறவிக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்கு முன்னர் இடம்பெறும் மத நிகழ்வுகளின் போது வேட்பாளர்கள் தொடர்பில் கூற வேண்டாம். எவ்வாறாயினும், மகிழ்ச்சிக்குரியவிடயம்ஒன்றுஉள்ளது. நகம் வெட்டியதாகக் கூட ஒருமுறைப்பாடும்பதிவாகவில்லை. தூற்றி, அச்சுறுத்திய சம்பவங்கள் மாத்திரமேதேர்தல்வன்முறைகளாகப் பதிவாகியுள்ளன – என்றார்.

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும். அதற்கு தேவையான சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டிருப்பதாக கூறியுள்ள யாழ்.மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் என். வேதநாயகன், மக்கள் அனைவரும் வாக்களிக்கவேண்டும் எனவும் கோரியுள்ளார்.

தேர்தல்நிலைமைகள் குறித்து நேற்று மாலை ஊடகங்களை சந்தித்து கருத்து கூறியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 631வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. யாழ்.மாவட்டத்தின் தீவக பகுதிகளில் 9 வாக்களிப்பு நிலையங்கள்அமைக்கப்பட்டுள்ளன. இன்று காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இருந்து வாக்கு பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படவிருக்கின்றன. அதேபோல் வாக்களிப்பு நிறைவடைந்தவுடன் தீவகத்திலிருந்து கடற்படைப் படகுகள் மூலமாகவும், ஹெலிக்கொப்டர் மூலமாகவும் எடுத்து வரப்படவுள்ளன.

கடந்த காலத்தைப் போல் சுமுகமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் 12 பெரு வலயங்களாக பிரிக்கப்பட்டு 12 உப தெரிவத்தாட்சி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், 71 வலயங்களாகவும் பிரிக்கப்பட்டு 71உபதெரிவத்தாட்சி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மத்திய கல்லூரி வாக்கெண்ணும் மத்திய நிலையமாக செயற்படவுள்ளது. 33 வாக்கெண்ணும் நிலையங்களும், 11 தபால் மூல வாக்கெண்ணும் நிலையங்களும் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை எமது தேர்தல் மாவட்டத்தில் பாரியளவிலான தேர்தல் வன்செயல்கள் பதிவாகவில்லை.

ஆயினும் 40 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றபோதும் அவற்றில் 26 முறைப்பாடுகள் துண்டுப் பிரசுரங்கள், பதாகைகள் தொடர்பானவையும், மிகுதி முறைப்பாடுகள், இடமாற்றம் போன்ற விடயங்கள் தொடர்பான சிறிய முறைப்பாடுகளாக உள்ளன. எமது மாவட்டத்தில் சுமுகமான தேர்தல் நடைபெறும். வாக்களிக்கும் நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. எமது மக்கள் வாக்களிக்கும் தமது உரிமையைச் சரியாகப் பயன்படுத்திக் கட்டாயம் வாக்களிக்கவேண்டும் – என்றார். (ஐ–7)

## 3 இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று இராணுவ ஜெனரல்கள், நாளைஜனாதிபதித்தேர்தலுக்கான வாக்களிப்பு நடத்த விருக்கையில் இன்று திடீரென யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்றனர் என்று கொழும்புச்செய்திவட்டாரம் ஒன்று தகவல் தெரிவித்தது.

ஜெனரல்கள் பொனிபஸ் பெரேரா, சக்கி கலகே, சுமேத பெரேரா ஆகியோரே இன்று யாழ் வரவிருக்கின்றனர் என்று கூறப்பட்டது.

## மிலேனியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் வெளியிடப்படுவதாக அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது.

குறிப்பாக ஹெய்டி நாட்டில் மிலேனியம் சவால் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாகத் தவறான செய்திகள் பரப்பப்படுகின்றன. அவ்வாறனதொரு அமெரிக்கத் திட்டம் ஹெய்டியில் கிடையாது என அமெரிக்கத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, மிலேனியம் சவால் ஒப்பந்தத்தில் காணப்படுகின்ற சில முக்கிய திட்டங்கள் குறித்தும் அமெரிக்கத் தூதரகம் விளக்கியுள்ளது.

மிலேனியம் சவால் நிறுவனத்தின், 48 கோடி பொலர் கொடைக்கு அங்கீகாரம் அளிக்க அமைச்சரவை அனுமதியளித்தது.

இதனையடுத்து இந்த ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்திடக்கூடாதெனக் கடுமையான எதிர்ப்புகள் வெளியிடப்பட்டன.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி தேர்தல் முடியும் வரை இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படமாட்டதென அரசு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கைது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்பிராசா பொலிஸாரால் நேற்று மாலை கைது செய்யப்பட்ட நிலையில் இரவு 10 மணியளவில் விடுவிக்கப்பட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் தபால் மூல வாக்களிப்பின் போது, ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள தபால்மூல வாக்காளர்களின் பட்டியல் கோரப்பட்டது. அதனைத் தேர்தல்கள் ஆணைக்குழு தனிச் சிங்களத்தில் வழங்கியிருந்தது. எனவே தமிழ் மொழியில் தருமாறு கோரியிருந்தபோதும், அந்த பெயர் விவரங்கள் தமிழ் மொழியில் வழங்கப்படவில்லை என்று தம்பிராசா குறிப்பிட்டார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவை பதவிவிலகுமாறு கோரியும் நேற்று வியாழக்கிழமை மாலை அவர் யாழ்.மாவட்ட தேர்தல்கள் செயலகம் அமைந்துள்ள மாவட்டச்செயலகத்திற்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

அவர் போராட்டத்தை ஆரம்பித்து சிறிது நேரத்திலேயே யாழ். மாவட்ட தேர்தல்கள் அலுகலக அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.





இந்த நிலையில் தம்பிராசா நேற்று இரவு 10 மணிக்கு யாழ்ப்பாணம் பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். (ஐ –07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## சந்தி சிரிக்கும் தாராளம்...!

இலங்கையின் ஆறாவது ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவின் பதவிக் காலம் பெரும்பாலும் நாளை மறுதினத்துடன் முடிவடைகின்றது.

அவர் பதவி விலகுவதற்கு இடையில் மேலும் 284 கைதிகள் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலையாகின்றனர் என்று செய்தி வெளியாகியுள்ளது.

என்னே அவரது தாராளம்? மன்னிக்கும் மனப்பாங்கு...!

இப்போது, 65 வயதுக்கு மேற்பட்டோரும் சிறு குற்றங்களுக்காக சிறை வைக்கப்பட்டோருமே விடுவிக்கப்படுகின்றனர்.

ஆனால், பதவியை விட்டு இறங்க முன்னர் கடைசி நேரத்தில் அவர் வழங்கிய வேறு பொது மன்னிப்பு ஒன்று சந்தி சிரிக்கும் நிலையை ஏற்படுத்தியிக்கின்றது.

அப்படி சந்தி சிரிக்கும் நிலைமை ஏற்பட்டமையால் அதை சமாளிப்பதற்காக அவரது ஜனாதிபதி செயலகம் எடுத்த நடவடிக்கைகள் மேலும் நையாண்டித்தனத்துக்கு வழிசெய்திருக்கின்றன.

பதவியை விட்டு இறங்கும் சமயத்தில் கூட காத்திரமான விடயங்களைச் செய்யாமல் கோமாளித்தனம் பண்ணும் வேலையைச் செய்திருக்கின்றார் அவர். விடயம் இதுதான்:–

சுவீடன் பிரஜையான றோஜர் ஜொன்ஸனுக்கும், இலங்கைப் பெண்ணான ஷெம்லாவுக்கும் பிறந்த இரண்டு இளம் பெண்கள் கொழும்பு, ராஜகிரியவில் உள்ள றோயல் பார்க் தொடர்குடியிருப்பில் வசித்து வந்தனர். மூத்தவர் கரோலின் (சம்பவம் நடந்தபோது வயது 21). இளையவர் யுவோனி (வயது 19).

அக்காவை காதலித்து வந்த யூட் ஷ்ரமிந்த ஜெயமஹா 2005 ஜூன் 30 ஆம் திகதி அதிகாலை 2 மணிக்கு றோயல் பார்க் தொடர்மாடியின் மாடிப் படிக் கட்டுகளில் வைத்து தங்கை யுவோனியை உருட்டி, உருட்டிக் கடுமையாகத் தாக்கிப் படுகொலை செய்தார் எனக் கூறப்படுகின்றது. ஜெயமஹா மோசமாகத் தாக்கியமையில் அந்த இளம் பெண்ணின் மண்டையோடு 64 துண்டுகளாக உடைந்திருந்ததாகப் பின்னர் கூறப்பட்டது.

அடுத்த நாள் காலையில் தொடர் மாடியின் 19 ஆவது தளத்தின் மாடிப்படிக்கட்டில் யுவோனியின் சடலத்தை தொடர் மாடி ஊழியர்கள் கண்டு பிடித்தனர்.

இந்த வழக்கு இலங்கையில் மிகப் பரபரப்பை ஏற்படுத்தியது. மேல் நீதிமன்ற விசாரணையில் இருபது வயது இளைஞனான ஜெயமஹாவுக்கு முதலில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் அதற்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்ட போது அந்தத் தீர்ப்பை மாற்றி மரண தண்டனையாக மேன் முறையீட்டு நீதிமன்று உத்தரவிட்டது.

மிகவும் செல்வந்தரான ஜெயமஹா குடும்பத்தவருக்கு எதிராகவே அப்போது உணர்வலைகள் இருந்தன.

இந்த நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த மோசமான கொலைச் சம்பவத்தின் சூத்திரதாரியான ஜெயமஹாவுக்குத் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்திச் சத்தம் சந்தடியின்றிப் பொது மன்னிப்பு அளித்திருக்கின்றார்.

அதுவும் தாம் பதவியை விட்டு இறங்கும் சமயத்தில் இந்த வேலையை அவர் செய்திருக்கின்றார்.

ஜெயமஹா குடும்பத்தினர் செல்வந்தர்கள் என்பதால் பணம் பாதாளம் வரை – மரண தண்டனைச் சிறை வரை – பாய்ந்திருக்கின்றது எனப் பலரும் விமர்சிக்கின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் டட்லி சிறிசேனவின் மகள் வழிக்கு திருமண உறவு மூலம் ஜெயமஹா குடும்பத்துடன் தொடர்பு ஏற்பட்டதே இந்தப் பொது மன்னிப்பின் கீழான விடுதலைக்குக் காரணம் என்றும் சில செய்திகள் கசிந்தன.

எது, எப்படியென்றாலும் மிகப் பரபரப்பை ஏற்படுத்திய ஒரு மோசமான கொலைச் சம்பவத்தின் சூத்திரதாரிக்குத் தமது பதவிக் காலத்தின் முடிவு வேளையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பு அளித்தமை பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலிய தேரர் மேற்படி ஜெய மஹாவின் பெற்றோருடன் நேரில் வந்து வற்புறுத்தியமையாலும், காலி மறைமாவட்ட ஆயர் றேமண்ட் கிங்ஸிலி விக்கிரமசிங்க எழுத்து மூலம் கேட்டுக் கொண்டமையாலும், பிற சமூக, சமயத் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்தமையாலும் இந்தப் பொது மன்னிப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கினார் என ஜனாதிபதி செயலகம் 'சமாளிப்பு' அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

ஆனால், இந்தச் செய்தியை காலி மறைமாவட்ட ஆயர் அடியோடு மறுத்துள்ளார். தாம் அப்படி ஒரு கைதிக்குப் பொது மன்னிப்பு அளித்து விடுவிக்குமாறு கோரினார் என்று கூறுவது சுத்தப் பொய் என அவர் மறுத்துள்ளார்.

தனக்கு வாக்களித்துத் தன்னை இந்த ஜனாதிபதிப் பதவிக்கு உயர்த்திய தமிழ் மக்களுக்கு ஒரு கைம்மாறாகக் குறைந்த பட்சம், தாயை இழந்து அநாதைகளாகத் தவிக்கும் சிறுவர், சிறுமியரான இரு தமிழ் பிஞ்சுகளின் பாதுகாப்புக்காகவேனும் அந்தச் சகோதரங்களின் இளம் தந்தையான தமிழ்க் கைதி ஆனந்த சுதாகரனுக்குப் பொது மன்னிப்பை அளித்து விடுதலை வாங்கிக் கொடுக்காதவர் இந்த மைத்திரிபால சிறிசேன.

சர்சைக்குரிய ஒரு கொலைக் குற்றவாளிக்கு அந்த மன்னிப்பை வழங்கித் தமது தாராளத்தை நீரூபித்திருக்கின்றார் அவர்....!

### நாளை ஜனாதிபதித் தேர்தல்

# வெற்றியாளர் தொடர்பில் வாக்காளர்கள் பந்தயம்!

கொழும்பு, நவ.15

ஜனாதிபதித் தேர்தல் நாளை நடைபெற உள்ள நிலையில், வெற்றியாளர் தொடர்பில் வாக்காளர்கள் பந்தயம் கட்டும் நடவடிக்கை தீவிரம் அடைந்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

தேர்தலுக்காகத் தேயிலைத் தோட்டங்கள், பலா மரங்கள், பணம், காணிகள் என்பன பந்தயங்களாக முன்வைக்கப்பட்டுள்ளன. இரண்டு ஏக்கர் தேயிலைத் தோட்டத்தை, ஒருவர் பந்தயத்திற்காக பயன்படுத்தியுள்ளார்.

அதற்காக அதற்கு சமமான இன்னும் ஒரு தேயிலை தோட்டத்தையும், பலா மரங்கள் இரண்டையும், இரண்டு லட்சம் ரூபா பணத்தையும் பந்தயத்திற்காக மற்றவர் பயன்படுத்தியுள்ளாராம்.

இதேவேளை, சில உணவங்களின் உரிமையாளர்கள் மற்றும் அதில் சேவை செய்யும் ஊழியர்களும் பந்தயம் கட்டியுள்ளனர்.

அதற்காக 10 லீட்டர் ஐஸ் கிறிம்களைப் பந்தயப் பொருளாக அவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

முச்சக்கர வண்டிச் சாரதிகளும் இந்த நடவடிக்கையில் அதிகம் ஈடுபட்டு வருகின்றனர் என அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

# வெள்ளவத்தையில் 2 கடைகளில் தீ!

*கொழும்பு, நவ.15*

*வெள்ளவத்தையில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக இரு கடைகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*பிரபல ஆடை விற்பனை நிறுவமான "நோலிமிட்"டிற்கு அருகாமையில் இந்த அனர்த்தம் நேற்று முன்தினம் ஏற்பட்டுள்ளது.*

*றோயல் பேக்கரி உட்பட இரு கடைகள் எரிந்துள்ளன என முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தீ பரவலுக்கான காரணம் இன்னும் வெளியாகவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

# வட்டுக்கோட்டை பிக்னல் மைதானப் படுகொலை; விசாரணையா? விடுதலையா? டிசெ.10இல் முடிவு!

வட்டுக்கோட்டை பிக்னல் மைதானத்தில் இளம் குடும்பத்தலைவர் ஒருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 6 எதிரிகளுக்கு எதிரான குற்றப்பத்திரிகைக்கு அமைய விளக்கத்தை நடத்துவதா அல்லது அவர்களை விடுவித்து விடுதலை செய்வதாக என்ற தீர்க்கமான கட்டளையை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் வரும் டிசெம்பர் 10ஆம் திகதி வழங்கவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் ராஜன் கதிர்காமர் வெற்றிக்கிண்ணத்துக்கான 50 ஓவர்கள் கிரிக்கெட் போட்டி 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி வட்டுக்கோட்டை பிக்னல் மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் இருதரப்பினருக்கு இடையே முறுகல் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியது. கைகலப்பில் யாழ்ப்பாணம் பிரதான வீதியைச் சேர்ந்தவரும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவனுமான ஜெயரட்ணம் டனோசன் அமலன் (வயது 24) என்னும் ஒரு பிள்ளையின் தந்தை உயிரிழந்தார்.

சம்பவத்தையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் 9 பேர் வரை சரண்டைந்தனர். மல்லாகம் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணை இடம்பெற்றது. அதனையடுத்து 6 பேருக்கு எதிராகக் கொலைக் குற்றச்சாட்டின் கீழான குற்றப் பத்திரிகை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டவாதி மாதினி விக் னேஸ்வரன் மன்றில் முன்னிலையானார்.

முதலாவது எதிரிக்காக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், இரண்டாவது எதிரி சார்பில் நளின், நான்காவது எதிரி சார்பில் மூத்த சட்டத்தரணி வி.திருக்குமரன் ஆகியோர் முன்னிலையானார்கள்.

பொலிஸாரின் பெரும் குற்றத் தகவல் புத்தகங்களில் நேரம் மாற்றம் இடம்பெற்றுள்ளதாக அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகள் மற்றும் புலனாய்வு விசாரணைகளில் திரிபுபடுத்தல்கள் உள்ளன. அதனால் இந்த வழக்கை விளக்கத்துக்கு எடுத்து நடத்துவதனால் நீதிக்குப் பங்கம் ஏற்படும் என்பதுடன் எந்தப் பிரயோசனமும் ஏற்படாது. எனவே வழக்கை விளக்கத்துக்கு எடுக்காமல் எதிரிகளை விடுவித்து விடுதலை செய்ய வேண்டும்" – என்று குறிப்பிட்டு நீண்ட சமர்ப்பணத்தை முதலாவது எதிரி சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்தார்.

பொலிஸாரின் பெரும் குற்றத் தகவல் புத்தகத்தில் 6ஆவது சந்தேகநபரிடம் 2015 மார்ச் 17ஆம் திகதி பெறப்பட்ட வாக்குமூலத்தில் நேரம் மாற்றம் செய்யப்பட்டதாக இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தின் பகுப்பாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இந்த வழக்கின் விளக்கத்தை மீள எடுப்பதற்கும் சாட்சிகள் அனைவரிடமும் மீளவும் சாட்சியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த மன்றில் விண்ணப்பம் செய்த எதிரிகள் தரப்புச் சட்டத்தரணிகள் தற்போது விளக்கத்தை நடத்தாது எதிரிகளை விடுவிக்க விண்ணப்பம் செய்கிறார். எதிரிகள் தரப்புச் சட்டத்தரணிகளின் விண்ணப்பத்துக்கு அமைவாக சாட்சிகளுக்கு அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்கும் உத்தரவு மன்றினால் வழங்கப்பட்ட நிலையிலேயே அவர்கள் தற்போது வழக்கை விளக்கத்துக்கு எடுக்கக் கூடாது என விண்ணப்பம் செய்கின்றனர். எனவே வழக்கின் விளக்கத்தை நடத்த மன்று கட்டளையிடவேண்டும் – என்று அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் சமர்ப்பணம் செய்தார்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் பதிவு செய்த மன்று, வழக்கின் கட்டளையை வரும் டிசெம்பர் 10ஆம் திகதி வழங்கப்படும் எனத் திகதியிட்டது. அத்துடன், அன்றைய தினத்துக்கு முன்னர் எழுத்துமூல சமர்ப்பணங்கள் இருப்பின் சமர்ப்பிக்க முடியும் எனவும் அறிவுறுத்தல் வழங்கியது மன்று.




## நாளை

16.11.2019
சனிக்கிழமை

நட்சத்திரம்: சதுர்த்தி மு.இ. 07.11 வரை.
திதி : திருவாதிரை மு.இ. 11.33 வரை.
இராகுகாலம் : 09.07 – 10.37
சுப நேரம் : 03.07 – 04.37

## அசம்பாவிதங்கள் எதுவுமே இல்லை

கொழும்பு, நவ. 15

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் நிறைவடைந்த பின்னர் நடைமுறையாகியுள்ள அமைதிக் காலத்தில் தற்போதுவரை எவ்விதமான அசம்பாவிதச் சம்பவங்களும் பதிவாகவில்லை யெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பணிகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜகத் அபேசிறி குணவர்தன இதனை தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் நேற்று முன் தினம் நள்ளிரவுடன் நிறைவடைந்தன.

இந்த நிலையில் அமைதிக் காலத்தில் தேர்த லுடன் தொடர்புடைய அனைத்துப் பிரசாரச் செயற் பாடுகளும் தடை செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர கூறினார். (ஐ)

## மின் தடை

யாழ்ப்பாணம், நவ.15

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.00 மணி யிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில்** செட்டிக்குளம் நகர பிரதேசத்தில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# மனைவியின் பொல்லடியில் உயிரிழந்தார் இளம் கணவர்

## மகனைக் காப்பாற்ற முயன்றபோது அனர்த்தம்

வாழைச்சேனை கண்ணகிபுரம் பகுதியில் தனது கணவனை பெண் ஒருவர் தாக்கி கொலைச் செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கணவன், மனைவிக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதால் இந்தக் கொலை சம்பவம் இடம்பெற்றுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் போது தனது மகனை கூரிய ஆயுதமொன்றில் தாக்கக் கணவன் முயற்சித்துள்ளார்.

இதனை அவதானித்த அந்தப் பெண் மகனைக் காப்பாற்றும் முயற்சியில் கணவனைப் பொல்லு ஒன்றி னால் தாக்கியுள்ளார் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் பலத்த காயமடைந்த கணவன் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் வாழைச்சேனை கண்ணகிபுரம் 3 ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த 36 வயதுடைய மாரிமுத்து சுரேஷ் என்பவரே உயிரிழந்துள்ளார். 16 வயதான மகன் அதே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தாக்குதலை நடத்திய சந்தேகநபரான இளம் பெண்ணை வாழைச்சேனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சுழிபுரம் மாணவி கொலையில் சந்தேகநபர்களுக்கு தொடர்பிருப்பது இரசாயனப் பகுப்பாயில் வெளிப்பாடு

## யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் அரச சட்டத்தரணி தகவல்




யாழ்ப்பாணம்,நவ.15

சுழிபுரம் மாணவி சிவனேஸ்வரன் றெஜினா படுகொலை வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ள சந்தேகநபர்களுக்கு கொலையுடன் தொடர் புள்ளது என்பது அரச இரசாயனப் பகுப்பாய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதுதொடர்பான உத்தி யோகபூர்வ பகுப்பாய்வு அறிக்கை 2 வாரங்களில் நீதிவான் நீதிமன்றுக்கு முன்வைக்கப்படும். அதனால் விசாரணைகளை முன்னெடுக்க வசதியாக சந்தேகநபர்களின் விளக்கமறியலை டிசெம்பர் இறுதிவரை நீடிக்கவேண்டும்

– இவ்வாறு அரசசட்டவாதி மாதினி விக்னேஸ்வரன், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விண்ணப்பம் செய்தார்.

சுழிபுரம் காட்டுபுலம் அ.த.க. பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி பயின்ற சிவனேஸ்வரன் றெஜினா (வயது – 6) என்ற சிறுமி அப்பகுதி தோட்டக் கிணற் றிலிருந்து 2018ஆம் ஆண்டு ஜூன் 25ஆம் திகதி மாலை சடலமாக மீட்கப்பட்டார்.

பாடசாலைக்குச் சென்று திரும்பிய மாணவியைக் கடத்திச் சென்று கொலை செய்துவிட்டு சடலம் கிணற் றுக்குள் போடப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸா ரால் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மூவரும் கடந்த 17 மாதங்களாகத் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் ளனர்.

மல்லாகம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் சந்தேகநபர்கள் தொடர்ச்சியாக ஒரு வருடத்துக்கு மேல் விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளமையால் அவர்களுக்கான விளக்கமறியலை நீடிக்கும் அதிகாரம் மேல் நீதிமன்றுகே உள்ளது.

அதனால் சிறுமி படுகொலை வழக்கின் சுருக்க முறையற்ற விசாரணைகள் நிறைவடையாத நிலை யில் சந்தேகநபர்கள் மூவரினதும் விளக்கமறியலை மேலும் 3 மாதங்களுக்கு நீடிப்பதற்கு சட்ட மா அதி பர் திணைக்களம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விண்ணப்பம் செய்தது.

இந்த விண்ணப்பம் யாழ்ப்பாணம் மேல் நீதி மன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னி லையில் நேற்று முன்தினம் புதன்கிழமை விசார ணைக்கு வந்தது.

இதன்போது சந்தேகநபர்கள் மூவரினதும் விளக்கமறியலை நீடிக்குமாறு அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் சமர்ப்பணம் செய்தார்.

மாணவி சிவனேஸ்வரன் றெஜினா படுகொலை யுடன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு தொடர்புள்ளது என்பது அரச இரசாயனப் பகுப்பாய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் உத்தியோகபூர்வ பகுப்பாய்வு அறிக்கை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த அறிக்கை 2 வாரங்களில் நீதிமன்றுக்கு முன்வைக் கப்படும். அதனால் இரசாயன பகுப்பாய்வு அறிக்கையின் படி மேலும் விசாரணைகள் முன் னெடுக்கப்படவேண்டும். எனவே சந்தேகநபர்களின் விளக்கமறியலை டிசெம்பர் 26ஆம் திகதிவரை நீடிக்க மன்று உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் விண்ணப் பித்தார். அரச சட்டவாதியின் சமர்ப்பணத்தை ஆராய்ந்த மன்று மனுவை வரும் 26ஆம் திகதி வரை ஒத்திவைத்தது.

## கோட்டாபய மீதான வழக்கில் மேன்முறையீடு

பத்திரிகையாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை தொடர்பாக, கோட்டாபய ராஜ பக்ஷவுக்கு எதிராக கலிபோர்னியா மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டமையை அடுத்து அதற்கு எதிராக, லசந்த விக்ரமதுங்கவின் மகள் அகிம்சா விக்ரமதுங்க மேன்முறையீடு செய் துள்ளார்.

## ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் 284 கைதிகள் விடுதலையாவார்களாம்



சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 284 கைதிகள் ஜனாதிபதியின் பொதுமன் னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளனர். ஜனாதி பதியின் அனுமதி கிடைத் தவுடன் அவர்களை விடு தலை செய்யவுள்ளனர் என சிறைச்சாலைகள் ஆணை யாளர் நாயகம் ஜே.டபிள்யூ. தென்னக்கோன் தெரிவித் துள்ளார்.

65 வயதுக்கும் மேற்பட்ட, சிறுகுற்றங்களுக்காக சிறை வைக்கப்பட்டுள்ளவர்களே இவ்வாறு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள் ளனர்.

இந்த கைதிகள் குறித்த விவரங்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளன எனவும், அதற்கு அனு மதி கிடைத்தவுடன் அவர் களை உடனடியாக விடு தலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சிறைச் சாலைத் தகவல்கள் தெரி விக்கின்றன. எனினும் சிறைகளில் அடைபட்டு இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள், குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாதவர்கள், வழக்குத் தாக்கல் செய்யப்ப டாதவர்களைத் தாம் பதவி யில் இருந்து விலகிச் செல் லும்போதும் விடுவிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயலவில்லை என்ற விமர்சனங்கள் எழுந் துள்ளன.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
WesternUnion WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தினை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்
உலகெங்குமிருந்து உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை
No.303, K.K.S. Road, Jaffna. Srilanka. Tel: 021 222 2670/5392 Fax: 021 222 3214
Email: srimurugan09@gmail.com srimurugan303@gmail.com

# ஓமனில் மழைநீர் குழாய் பதிக்கும் பணியின்போது ஆறு இந்தியத் தொழிலாளர்கள் நீரில் மூழ்கிப் பலி

மஸ்கட்,நவ.15

ஓமன் நாட்டில் மழை நீரில் மூழ்கி மதுரையை சேர்ந்த தொழிலாளி உள்பட 6 இந்தியர்கள் உயிரிழந்தனர்.

அரபு நாடான ஓமன் நாட்டின் தலைநகர் மஸ்கட்டில் குழாய் பதிக்க பள்ளம் தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்த 6 இந்திய தொழிலாளர்கள் மண் சரிந்து பலியாகினர் என முதலில் தகவல் வெளியானது. இந்த நிலையில் அவர்கள் நிலத்தடியில் 50 அடி ஆழத்தில் மழைநீர் குழாய் பதிக்கும் பணியின்போது நீரில் மூழ்கிப் பலியாகினர் எனத் தற்போது தகவல் வெளியாகி உள்ளது. அதுபற்றிய விவரம் வருமாறு: –

ஓமன் நாட்டில் கடந்த சில நாள்களாகப் பல்வேறு இடங்களில் கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக அங்குள்ள அல் சீப் பகுதியில் மழைநீர் வெளியேறுவதற்கு வசதியாக நிலத்தடியில் இராட்சத



கொன்கிரீட் குழாய்கள் பதிக்கும் பணிகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன.

அங்கு சுரங்கம் அமைத்து கொன்கிரீட் குழாய்களை நிலத்தடியில் பொருத்தும் பணியில் 2 தனியார் நிறுவனங்கள் சார்பில் இந்தியாவைச் சேர்ந்த 6 பேர் பணியமர்த்தப்பட்டனர். அவர்கள் அங்கு சுமார் 50 அடி ஆழத்தில் பதிக்கப்பட்டு இருந்த 1,000 அடி நீளமுள்ள இராட்சதக் குழாயின் உள்ளே இறங்கி குழாய்களைப் பொருத்தும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது திடீரென்று அங்கு கனமழை பெய்யத் தொடங்கியது. இதனால் மழைவெள்ளம் பெருக்கெடுத்து கொன்கிரீட் குழாய் உள்ளே நுழைந்தது. குழாயில் இருந்து வெளியேற வழி இல்லாததால் 6 தொழிலாளர்களும் தண்ணீரில் மூழ்கினர். தகவல் அறிந்து வந்த பொலிஸார் மற்றும் தீயணைப்புத் துறையினர், நீர்மூழ்கி வீரர்கள் உதவியுடன் தொழிலாளர்களைத் தேடினர். பல மணி நேர போராட்டத்திற்கு பிறகு 6 தொழிலாளர்களும் பிணமாக மீட்கப்பட்டனர்.

இந்த நிலையில், உயிரிழந்த 6 தொழிலாளர்களின் உடல்களும் அடையாளம் காணப்பட்டன. இவர்கள், மதுரையை சேர்ந்த செந்தில்குமார் (வயது 43), ஆந்திர மாநிலத்தை சேர்ந்த சத்தியநாராயணா (22), பீமா ராஜு (30), பீகார் மாநிலத்தை சேர்ந்த சுனில் பார்த்தி (29), விஷ்வகர்மா மஞ்சி (29), உத்தரபிரதேச மாநிலத்தை சேர்ந்த விகாஷ் சவுகான் மஹாதேவ் (27) ஆகியோர் என்பது தெரியவந்துள்ளது.

இந்தியத் தூதரகத்தின் உதவியுடன் 6 தொழிலாளர்களின் உடல்களையும் விமானங்கள் மூலம் சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. பணியில் இருந்தபோது உயிரிழந்த 6 தொழிலாளர்களின் குடும்பத்துக்கும் உரிய இழப்பீட்டை வழங்க ஓமன் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

# இந்தியாவின் குடியரசுத் தின விழாவில் இம்முறை பிரேசில் அதிபர் பங்கேற்பார்



பிரேசிலியா,நவ.15

இந்தியாவின் 71 ஆவது குடியரசுத் தின விழாவில் பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சோனரோ சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கிறார்.

பிரிக்ஸ் நாடுகளின் 11 ஆவது உச்சி மாநாடு பிரேசிலில் நடைபெற்று வருகிறது. 'புதுமையான எதிர்காலத்திற்கான பொருளாதார வளர்ச்சி' என்ற தலைப்பில் மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் பிரிக்ஸ் நாடுகளின் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். இந்த மாநாட்டுக்கு இடையே, பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சோனரோவை இந்தியப் பிரதமர் மோடி சந்தித்து பேசினார்.

அப்போது, பன்முகத்தன்மையுடன் கூடிய ஒத்துழைப்பு உள்ளிட்டவை குறித்து இரு தலைவர்களும் ஆலோசித்தனர். இந்தச் சந்திப்பின் போது, இந்தியக் குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள வருமாறு பிரேசில் அதிபருக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பை பிரேசில் அதிபர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார் என்று சந்திப்புக் குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், பிரேசில் வரும் இந்தியர்களுக்கு விசா தேவையில்லை என்ற அறிவிப்புக்கு பிரதமர் மோடி வரவேற்பு தெரிவித்தார் எனவும் கூறப்பட்டுள்ளது.

# சீன, ரஷ்ய அதிபர்களுடன் பிரேசிலில் மோடி சந்திப்பு





பிரேசிலியா,நவ.15

பிரிக்ஸ் மாநாட்டுக்கு இடையே சீன அதிபர் ஜி ஜின்பிங், ரஷ்ய அதிபர் புடின் ஆகியோரை இந்தியப் பிரதமர் மோடி சந்தித்துப் பேசினார்.

பிரேசில் நாட்டில் 11 ஆவது பிரிக்ஸ் மாநாடு நடைபெற்று வருகிறது. பிரிக்ஸ் நாடுகளின் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பிரேசில், இந்தியா, ரஷ்யா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

பிரிக்ஸ் மாநாட்டுக்கு இடையே, புதன்கிழமை பிரதமர் மோடி, சீன அதிபர் ஜி ஜின்பிங்கைச் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின் போது இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. பிரதமர் மோடி – ஜி ஜின்பிங் இடையேயான சந்திப்பு பயனுள்ள வகையில் இருந்ததாக பிரதமர் அலுவலக டுவிட்டர் பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்.சி.இ.பி. எனப்படும் தாராள வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியா இணைய மறுத்த நிலையில், இரு தலைவர்களுடனான சந்திப்பு நடைபெற்றுள்ளது கவனிக்கத்தக்கது.

அதேபோல், ரஷ்ய அதிபர் புடினையும் பிரதமர் மோடி சந்தித்து பேசினார். இந்தச் சந்திப்பின் போது இருதரப்பு விவகாரங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் ஆலோசித்தனர். அடுத்த ஆண்டு ரஷ்யாவில் நடைபெறும் வெற்றித்தின கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள வருமாறு பிரதமர் மோடிக்கு புடின் அழைப்பு விடுத்தார்.

புடினுடனான சந்திப்புக்கு பிறகு பிரதமர் மோடி தான் வெளியிட்ட டுவிட் பதிவில், அதிபர் புடினுடன் சிறப்பான முறையில் சந்திப்பு நடைபெற்றது. சந்திப்பின் போது, இந்தியா – ரஷ்யா உறவுகள் குறித்து ஆலோசித்தோம். வர்த்தகம், பாதுகாப்பு, கலாசாரம் உள்ளிட்ட துறைகளில் இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே விரிவான ஒத்துழைப்பு உள்ளது. நெருக்கமான இருதரப்பு உறவுகள் மூலம் இருநாட்டு மக்களும் பயனடைவார்கள் என்று தெரிவித்தார்.

# சபரிமலை கோவில் சிக்கல் ஏழு நீதிபதிகள் அமர்வுக்கு!

புதுடெல்லி,நவ.15

சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குள் அனைத்து வயதுடைய பெண்களும் செல்வதற்கு அனுமதி அளித்த தீர்ப்பை எதிர்த்துத் தொடரப்பட்ட சீராய்வு வழக்கு 7 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்றப்படும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குள், குறிப்பிட்ட வயதுடைய பெண்கள் நுழைவதற்கு 1991 இல் கேரள உயர்நீதிமன்றம் தடை விதித்தது. இதை 2018 செப்டம்பரில் ரத்துச்செய்த உச்சநீதிமன்றம் அனைத்து வயதுப் பெண்களும், பாலின வேறுபாடுகளின்றி சபரிமலைக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

அப்போதைய தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான, உச்சநீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு, 4:1 என்ற பெரும்பான்மையில் இந்தத் தீர்ப்பை வழங்கியது.

இந்தத் தீர்ப்பின் விளைவாக, போராட்டங்கள் வெடித்தன. பல பெண் செயல்பாட்டாளர்கள் சபரிமலை கோவிலுக்குள் செல்ல முயன்றனர். தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் சீராய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுவை விசாரித்த தலைமை




நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான அரசியல் சாசன அமர்வு, நேற்றுக் காலை தீர்ப்பு வழங்கியது. 3:2 என்ற பெரும்பான்மையில் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தீர்ப்பை வாசித்தார். அதில், 'பெண்கள் செல்ல கட்டுப்பாடு விதிக்கப்படுவது சபரிமலையில் மட்டுமல்ல வேறு கோவில்களிலும், மசூதிகளிலும் உள்ளது. அனைத்து மதத்தினரும் அவரவர் மத நம்பிக்கையை கடைப்பிடிக்க உரிமை உள்ளது. மத வழிபாடு, நம்பிக்கை என்ற பெயரில் பாகுபாடு கூடாது. மதம் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் ஆய்வு செய்ய வேண்டி உள்ளது. எனவே, இந்த வழக்கை 7 நீதிபதிகள் கொண்ட வேறு அமர்வுக்கு பரிந்துரை செய்கிறோம்' என்றார்.

அனைத்து வயதுடைய பெண்களும் சபரிமலைக்கு செல்ல அனுமதி அளித்து, உச்ச நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய தீர்ப்புக்கு தடை விதிக்கப்படவில்லை.

# கோவையில் ரயிலில் மோதி நான்கு இளைஞர்கள் சாவு!

கோவை,நவ.15

கோவை இருகூர் அருகே ராவுத்தர் பாலம் பகுதியில் ரயில் மோதி 4 இளைஞர்கள் பலியானார்கள்.

கோவையில் இருகூர் அருகே ராவுத்தர் பாலம் அமைந்துள்ளது. நேற்று அதிகாலை ரயில்வே பாலத்தில் சில உடல்கள் சிதறிக் கிடப்பதாகப் போத்தனூர் காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து போத்தனூர் காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்தனர்.

தொடர்ந்து நடந்த விசாரணையில் ரயில் மோதி 4 பேர் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. மேலும் உயிரிழந்தவர்கள் 20 முதல் 22 வயது மதிக்கத்தக்கவர்களாக உள்ளனர் எனவும், அதனால் அவர்கள் 4 பேர்களும் கல்லூரி மாணவர்களாக இருக்கக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் ரயில் மோதிப் பலியானார்களா அல்லது வேறு ஏதும் காரணம் இருக்குமா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணையைத் தொடங்கி உள்ளனர்.

இளைஞர்களின் உடல்களை மீட்ட போத்தனூர் பொலிஸார் அவற்றை அரசு மருத்துவமனைக்குக் கொண்டுசென்றனர்.

# பொலிவியாவில் அரசியல் குழப்பம் நீடிப்பு!

## தன்னைத் தானே இடைக்கால அதிபர் என அறிவித்தார் எதிர்க்கட்சித் தலைவி அனெஸ்

லா பாஸ்,நவ.15

பொலிவியாவில் நீடிக்கும் அரசியல் குழப்பங்களுக்கு இடையே பெண் எம்.பி. ஒருவர் தன்னை தானே இடைக்கால அதிபராக அறிவித்துக்கொண்டார்.

தென்னமெரிக்க நாடான பொலிவியாவில் தொடர்ச்சியான அரசியல் நெருக்கடி காரணமாக அதிபர் இவோ மோரலஸ் தனது பதவியை ராஜினாமாச் செய்தார். மேலும் இராணுவம் அவரைக் கைது செய்ய முயற்சிப்பதாகத் தகவல்கள் பரவின. இதனால் அவர் நாட்டை விட்டு வெளியேறி மெக்ஸிக்கோவில் தஞ்சம் அடைந்தார். எனினும் பொலிவியாவில் தொடர்ந்து அரசியல் குழப்பம் மற்றும் அசாதாரண சூழ்நிலை நீடிக்கிறது.

இந்த நிலையில் பொலிவியா நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவரும், பெண் எம்.பி.யுமான ஜீனைன் அனெஸ் நாட்டின் இடைக்கால அதிபராக தன்னைத் தானே அறிவித்துக்கொண்டார். நேற்று முன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற அவசர கூட்டத்தில் அவர் தனது முடிவை அறிவித்தார்.

ஆனால் இவோ மோரலசின் கட்சியை சேர்ந்த எம்.பிக்களே இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் சபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். இதனால் ஜீனைன் அனெஸை இடைக்கால அதிபராக அங்கீகரிக்க போதிய உறுப்பினர்கள் இல்லை.

ஆனால், அரசமைப்புச் சட்டப்படி, அதிகார வரிசையில் அதிபருக்கு அடுத்தபடியாக தான் இருப்பதால் தன்னால் மட்டுமே இடைக்கால அதிபராக இருக்கமுடியும் என ஜீனைன் அனெஸ் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். மேலும் விரைவில் நாட்டில் தேர்தல் நடக்கும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

ஜீனைன் அனெஸ் தன்னை தானே இடைக்கால அதிபராக அறிவித்துக்கொண்டமைக்கு முன்னாள் அதிபர் இவோ மோரலஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது மிகப்பெரிய சதி என்றும், ஜீனைன் அனெஸ் ஆட்சிக்கவிழ்ப்பில் ஆர்வம் கொண்டவர் என்றும் அவர் தனது டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.



இதற்கிடையே தலைநகர் லா பாஸ் மற்றும் சாண்டா குரூஸ் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் இவோ மோரலஸின் ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறையில் 7 பேர் பலியாகினர். மேலும் 12 பேர் படுகாயம் அடைந்தனர்.

## வரலாறு காணாத கடும் வறட்சியினால் ஸிம்பாப்வேயில் வனவிலங்குகள் மடிவு

### யானைகளில் மட்டும் 150 உயிரிழப்புகள்

ஆப்பிரிக்க நாடான ஸிம்பாப்வேயில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் 150 யானைகள் உள்பட நூற்றுக்கணக்கான வனவிலங்குகள் பரிதாபமாக உயிரிழந்தன.

மிகவும் குறைவான மழைப்பொழிவு, பருவநிலை மாற்றம், மரங்கள் அழிப்பு போன்ற காரணங்களால் அந்நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இதனால் நீர் நிலைகள் முற்றிலும் வறண்டு காணப்படுகின்றன.

கடந்த 3 மாதங்களாக தொடரும் இப்போக்கினால் வனஉயிரினங்கள் கடும் அவதிக்கு உள்ளாகி உள்ளன. கடந்த ஒக்டோபர் மாதம் நீர் மற்றும் உணவின்றி 55 யானைகள் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது கடந்த சில வாரங்களில் 150 யானைகள் மற்றும் காட்டெருமைகள், காட்டு நாய்களும் பட்டினியால் துடிதுடித்து உயிரிழந்து வருகின்றன.



இந்நிலையில் பசி மற்றும் தாகத்தால் உயிரிழக்கும் விலங்குகளின் தந்தம், பல் மற்றும் நகம் உள்ளிட்ட பாகங்களை அறுத்தெடுத்து, கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்கள் விற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகின் மிகப் பெரிய பனிப் பிரதேசம் மாயம்


வடதுருவப் பகுதியான ஆர்க்டிக் பிரதேசத்தில் மிகப்பெரிய பனிப்பிரதேசமே முற்றிலும்காணாமல்போனது ஆய்வாளர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது.

உலகின் மிகப் பெரிய தீவான கிரீன்லாந்தின் வடக்குப் பகுதியில் 3 லட்சத்து 86 ஆயிரம் சதுர மைல் பரப்பளவுள்ள மிகப் பெரிய பனிப்பிரதேசம் இருந்தது.

கடந்த 35 ஆண்டுகளில் ஏற்பட்ட பருவநிலை மாற்றம் காரணமாக இந்தப் பகுதியில் பனி உருகும் வேகம் மிக அதிகமாக இருந்ததால், தற்போது அந்தப் பனிப்பிரதேசத்தின் 95 வீதம் பனி கரைந்து போனதாக அமெரிக்க புவியியல்துறை விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதே வேகத்தில் பனி கரையுமானால் வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் மீதமுள்ள 5 விழுக்காடும் மாயமாகி விடும் என்று அவர்கல் எச்சரித்துள்ளனர்.

35 ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்த வீடியோவை டைம்லாப்ஸ்(timelapse) முறையில் விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர்.




## மாயமான அமெ. நீர்மூழ்கிக் கப்பல் 75 ஆண்டுகளின் பின் கண்டுபிடிப்பு



75 ஆண்டுகளுக்கு முன் மாயமான அமெரிக்காவின் நீர்மூழ்கிக் கப்பல் கடலுக்குள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த காலகட்டத்தில் பேர்ல் (Pearl) துறைமுகத்தில் ஜப்பான் விமானப்படையினர் நடத்திய தாக்குதலில் 2 ஆயிரத்து 500 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர்.

அப்போது ஜப்பான் மீது தாக்குதல் நடத்துவதற்காக 80 பேருடன் யு.எஸ்.எஸ். கிரேபேக் எஸ்.எஸ். - 208 என்ற நீர்மூழ்கிக் கப்பலை அமெரிக்கா அனுப்பியது.

இறுதியாக அந்தக் கப்பலில் இருந்து கடந்த 1944 ஆம் ஆண்டு பெப்ரவரி 26 ஆம் திகதிக்குப் பின்னர் எந்த சமிக்ஞையும் வராததால் அதனைத் தேடும் பணியில் அமெரிக்கா ஈடுபட்டது. தற்போது வரை நடந்த இந்தத் தேடுதல் பணியின் விளைவாக ஜப்பானின் ஒஹினாவா கடல் பகுதியில் அந்த நீர்மூழ்கிக் கப்பல் மூழ்கிக்கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## ஆராய்ச்சியை முடித்துக்கொண்டு திரும்புகிறது ஜப்பானின் விண்கலம்



ஜப்பானின் ஆளில்லா விண்கலம் தனது ஆராய்ச்சியை முடித்துக்கொண்டு பூமிக்குத் திரும்புகிறது.

பூமியின் அருகிலுள்ள சிறுகோள் ஒன்றை ஆராய்ச்சி செய்ய ஜப்பான் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால் அனுப்பப்பட்ட ஆளில்லா விண்கலம் தனது ஆய்வை முடித்துக்கொண்டு பூமியை நோக்கித் திரும்பி வந்துகொண்டிருக்கிறது.

ஹயபுசா 2 (HAYABUSA 2) என்ற பெயர் கொண்ட அந்த விண்கலம், ரையுகு (RYUGU) என்ற சிறுகோளை ஆராய்ச்சி செய்யக் கடந்த 2014ஆம் ஆண்டு அனுப்பப்பட்டது.

பூமியில் இருந்து 19 கோடி ஐம்பது லட்சம் மைல்கள் தொலைவில் வைரக்கல் வடிவில் உள்ள அந்தச் சிறுகோளில் துளையிட்டு பல்வேறு வகையான மாதிரிகளை சேகரித்துக்கொண்டு ஹயபுசா 2 விண்கலம் திரும்பி வருவதாகக் கூறப்படுகிறது.

விண்கலம் கொண்டுவரும் மாதிரிகளை ஆய்வு செய்வதன் மூலம் கோள்களின் தோற்றம், பூமியிலுள்ள பெருங்கடல்களின் மூலம் உள்ளிட்டவற்றை தெரிந்து கொள்ள வாய்ப்பு உள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikathir


# அமெரிக்க மிலேனியம் சவால்கள் ஒப்பந்தம் ஜனாதிபதித் தேர்தலின் பின் கைச்சாத்தாகும்

இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளிடம் இருந்து பெறும் கடன்களை மீளச் செலுத்துவதற்கு எவ்விதமான திட்டங்களும் இல்லாமல் இறக்குமதிப் பொருளாதாரத்தில் மாத்திரமே தங்கியுள்ளது.

குறிப்பாக ஏற்றுமதி உற்பத்திகளை முன்னேற்றுவதற்குப் பதிலாக இறக்குமதி உற்பத்திகளுக்கே முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. இதன் காரணமாகவே தேசிய கைத்தொழில்கள், உற்பத்திகள் அனைத்தும் செயலிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கைப் பொருளாதார நிபுணர்கள் சிலர் கூறுகின்றனர்.

இந்தப் பலவீனங்களின் அடிப்படையிலேயே அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனம் (Millennium Challenge Cooperation)(MCC) 48 கோடி டொலர்களை வழங்கத் தாமாகவே முன்வந்ததாக நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கை ஒற்றையாட்சி அரசின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2018 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றிருந்தார்.

அமெரிக்காவுக்குச் சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை MCC எனப்படும் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அதிகாரி புரோக் பியேர்மன் (Brock Bifrman) சந்தித்து உரையாடியிருந்தார்.

எந்தவிதமான முன் அறிவித்தலும் இன்றியே புரோக் பியேர்மன மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து MCC எனப்படும் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனம் வழங்கவுள்ள நிதியுதவிகள் குறித்து விளக்கமளித்திருந்தார்.

மைத்திரிபால சிறிசேன இந்தச் சந்திப்புத் தொடர்பாக எதிர்பார்த்திருக்கவேயில்லை. அவருக்கு அதிர்ச்சியாகவும் மகிழ்ச்சியாகவுமே இருந்ததாக புரோக் பியேர்மன் அப்போது செய்தியாளர்களிடம் கூறியிருந்தார்.

இந்த நிதி 2019 ஆம் ஆண்டு முற்பகுதியில் வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிதிக் கையளிப்பு நியூயோர்க்கில் இடம்பெறும் எனவும் அந்த நிகழ்வில் மைத்திரிபால சிறிசேன கலந்துகொள்ள வேண்டுமெனவும் புரோக் பியேர்மன் அப்போது அழைப்பும் விடுத்திருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளர் வெற்றிபெற்றாலும் MCC எனப்படும் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனம் வழங்கவுள்ள 48 கோடி டொலர் நிதியுதவியைப் பெறுவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டே ஆக வேண்டும்.

ஆனால் கொழும்பில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்காப் பொதுஜனப் பெரமுன, ஜே.வி.பி. உள்ளிட்ட கட்சிகளும், பௌத்த பிக்குமாரும் எதிர்ப்பு வெளியிடமையால் இந்த நிதியைப் பெறுவதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திடுவதைத் தாமதித்தது.

இலங்கை இராணுவத்திற்கு 2018 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 3 கோடி 90 லட்சம் டொலர் வழங்கப்பட்டிருந்த நிலையிலேயே MCC எனப்படும் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனம் 48 கோடி டொலர் நிதியுதவியை வழங்க முன்வந்தது.



MCC எனப்படும் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அதிகாரி புரோக் பியேர்மன் (Brock Bifrman) 2018 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நியூயோர்க்கில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து உரையாடியபோது எடுக்கப்பட்ட படம் இது.

இலங்கை இராணுவத்திற்கு 39 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியை வழங்கவுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வெளியிட்டிருந்த அறிக்கை ஒன்றில் கூறியிருந்தது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் ஹீதர் நொயட், இந்து சமுத்திர வலய பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்தி வருவதாகக் குறிப்பிட்டு 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஏழாம் திகதி இந்தோனேஷியா, மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த நிலையில் இந்த நிதி வழங்குவதற்கான அறிவிப்பு வெளியாகியிருந்தது.

வெளிநாடுகளின் இராணுவச் சேவைக்கு உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் இலங்கைக்கும் 39 மில்லியன் டொலர்கள் நிதி வழங்கப்பட்டிருந்தது. இதற்கான அனுமதியை அமெரிக்கக் காங்கிரஸ் வழங்கியிருந்தது. இதனையடுத்தே மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனத்தின் நிதியுதவி இலங்கைக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.




இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் தமது நிலையை உறுதிப்படுத்த அமெரிக்கா மேற்கொண்ட திட்டத்தின் மூலமாகவே இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன. இதற்கு மைத்திரி – ரணில் அரசாங்கம் விரும்பியோ விரும்பாமலோ அப்போது இணங்கியுமிருந்தது.

வடக்கில் முல்லைத்தீவில் இருந்து கிழக்கில் திருகோணமலை வரையான கடற்பகுதியையும் கொழும்பு, அம்பாந்தோட்டைத் துறைமுகங்களையும் மையமாகக் கொண்டே இந்த நிதியுதவிகள் வழங்கப்படுகின்றன. மிலேனியம் சவால்கள் கூட்டுத் தாபனத்தின் தலைவர் புரோக் பியேர்மன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து உரையாடியிருந்த போது இந்த விவரங்களைக் கூறியிருந்தார்

கடன்களில் இருந்து மீள்வதற்கும் உள்ளக அபிவிருத்திக்கும் ஏற்ற முறையில் MCC எனப்படும் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனத்தின் நிதியுதவிகள் மேலும் அதிகரிப்பதற்குஏற்றமுறையிலும் இலங்கை அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்யப்படவுள்ளது.

இந்த நிதியுதவிகளை வழங்குவதற்கான பொறிமுறைகள் குறித்த ஒப்பந்தத்தில் அம்பாந்தோட்டை, திருகோணமலைத் துறைமுகங்களின் பயன்பாடுகள் முக்கியமானவையாக அமையவுள்ளன. அத்துடன் கொழும்பின் உப நகரமாக திருகோணமலை மாற்றியமைக்கப்படவுள்ளது. அதற்கான கொழும்பு – திருகோணமலை அதிவேகச் சாலைகளை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதிவேகச்சாலைக்கான வரைபடம் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த ஒப்பந்தத்தில் அமெரிக்க இராணுவ நலன்கள் எதுவும் இல்லையென்றும் வீதி அபிவிருத்தி உள்ளிட்ட உட்கட்டுமான அபிவிருத்திகள் பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க கூறுகிறார்.

எவ்வாறாயினும் இந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் முழுமையாக வெளிவரவில்லை. இதனாலேயே பௌத்த அமைப்புகள் குழப்பமடைந்துள்ளன. கடும் எதிர்ப்புகளையும் வெளியிட்டு வருகின்றன.

இந்த நிதியுதவிகள் குறித்துப் புதுடில்லியுடன் பேசப்பட்டிருப்பதாகவும் இந்தியாவின் ஒத்துழைப்புக் கிடைக்குமெனவும் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரியொருவர் ஏலவே நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

இந்த ஒப்பந்தத்தின் பின்னணியிலேதான் அமெரிக்கா இலங்கையோடு சோபா ஒப்பந்தத்தையும் கைச்சாத்திடத் திட்டமிட்டுள்ளதாக அத்துரலியே ரதன தேரர் குற்றம் சுமத்தியுள்ளார். இதற்கான பேச்சுக்கள் அதிகாரபூர்வமாக இலங்கை அரசின் வெளியுறவு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளோடு நடைபெற்று வருவதாகவும் தேரர் கூறுகிறார்

எனவே எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளர் வெற்றிபெற்றாலும் MCC எனப்படும் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனம் 480 மில்லியன் நிதியுதவியை பெறுவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டே ஆக வேண்டும் என்பதை அமெரிக்க, இந்திய, இலங்கை அரசுகளின் சமகாலச் செயற்பாடுகள் கோடிகாட்டுகின்றன.

இந்த நிலையில் தேர்தலில் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே MCC எனப்படும் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனத்தின் நிதியுதவியைப் பெறமாட்டோமெனப் பிரதான வேட்பாளர்கள் தேர்தல் பிரச்சார மேடைகளில் இடித்துரைக்கின்றனர்.


எனினும் பிரதான சிங்களக் கட்சிகளின் வேட்பாளர்களின் மன நிலை தமக்கு நன்கு தெரியும் என்றும், பிரச்சாரங்களில் அமெரிக்காவுக்கு எதிராக வெளியிடப்படும் வேட்பாளர்களின் கருத்துக்கள் குறித்துத் தாம் ஒருபோதும் அலட்டிக் கொள்ளவேயில்லை எனவும் தூதரக அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

ஆனாலும் MCC எனப்படும் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடக் கூடாதெனக் கோரி சட்டத்தரணியொருவர் இலங்கை ஒற்றையாட்சி அரசின் உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைக் கடந்த வாரம் தாக்கல் செய்துள்ளார்.

நன்றி :- கூர்மை இணையம்

# டிப்பர் வாகனம் மோதி குடும்பத் தலைவர் சாவு!

## நுணாவிலில் அதிகாலை சோகம்



யாழ்ப்பாணம், நவ. 15

பாதுகாப்புப் பணி நிமித்தம் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பத்தலைவரை டிப்பர் வாகனம் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கைதடி, நுணாவில் பகுதியில் நேற்று அதிகாலை 4 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், குருநகர் கனகசிங்கம் வீதியைச் சேர்ந்த எம்.லக்கி (வயது – 34) என்ற குடும்பத்தலைவரே உயிரிழந்தார்.

தனியார் பாதுகாப்புச் சேவையின் மேற்பார்வையாளரான இவர், நிறுவனப் பாதுகாப்புக் கடமைகளை மேற்பார்வை செய்ய நேற்று அதிகாலை யாழ்ப்பாணத்தில் இருந்து சாவகச்சேரிக்கு மோட்டார் சைக்கிளில் சென்றபோதே விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# தேர்தலை முன்னிட்டு 2 நாள் மதுபான நிலையங்கள் பூட்டு

*கொழும்பு, நவ. 15*

*நாளை சனிக்கிழமை நடைபெறும் தேர்தல் வாக்களிப்பு காரணமாக நாட்டின் அனைத்து மதுபானச்சாலைகளும் இரண்டு தினங்களுக்கு மூடப்படும் என்று கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*தேர்தல் நேரங்களில் குழப்பங்கள் ஏற்படுத்தாத வகையில் பொதுமக்கள் நடந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை மதுபானச் சாலைகளை மூடுவதற்குத் தீர்மானம் எடுத்துள்ளதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*நாடு முழுவதும் நாளை ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுகின்றது.*

*தேர்தல் வாக்குச் சாவடிகள், வாக்கெண்ணும் நிலையங்களின் பாதுகாப்பு கருத்தில் கொண்டும் மக்களின் பாதுகாப்பையும், மக்களின் ஈடுபாட்டை கருத்தில் கொண்டும் இந்தத் தீர்மானம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)*

# பொதுநலவாய அமைப்பின் கண்காணிப்பாளர்கள் அமைதியான, நேர்மையான தேர்தலுக்கு அழைப்பு



கொழும்பு,நவ.15

அமைதியானதும் வெளிப்படைத்தன்மையுடனும் நம்பகத்தன்மையுடனுமான ஜனாதிபதித் தேர்தலுக்கு அனைவரும் பங்குதாரர்களாக வேண்டும் என்று தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பொதுநலவாய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுநலவாய நாடுகளைப்பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தக் குழுவினர் இலங்கை வந்துள்ளனர்.

அரசியல் நடவடிக்கை, வாக்களிப்பு, சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள், நீதித்துறை போன்றவற்றில் அங்கத்துவம் வகிப்பவர்களே இவ்வாறு தேர்தல் கண்காணிப்புப் பணிக்காக தேர்தல்கள் ஆணையாளரின் அழைப்பின் பேரில் இலங்கை வந்துள்ளனர். தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், சிவில் சமூகக் குழுக்கள், பொலிஸார், சர்வதேச சமூகப் பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் சர்வதேசக் காண்காணிப்பு உள்ளிட்ட வாக்களிப்புக்களுடன் தொடர்புடைய சகல தரப்பினரதும் கருத்துக்களை கேட்டறிந்து கொள்ள இந்தக் குழுவினர் எதிர்பார்த்துள்ளனர்.

நவம்பர் 16ஆம் திகதிக்குப் பின்னர் இந்தக் குழுவின் பிரதிநிதிகள் தமது கண்காணிப்புக்களின் அடிப்படையில், தயாரிக்கப்பட்ட உள்ளக அறிக்கையை வெளியிடவுள்ளனர். இறுதி அறிக்கை பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டதன் பின்னர் பொதுமக்கள் அவற்றை பெற்றுக் கொள்ள முடியும். இந்தக் கண்காணிப்பாளர்கள் குழுவினர் எதிர்வரும் 22ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாநகர சபையின் பட்ஜெட் நேற்று நிறைவேற்றம்

மட்டக்களப்பு, நவ. 15

மட்டக்களப்புமாநகரசபையின்2020ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட முன்மொழிவு 26 உறுப்பினர்களின் ஆதரவோடு வெற்றி பெற்றுள்ளதாக மாநகர முதல்வர் தியாகராசா சரவணபவன் தெரிவித்தார்.

இந்த வரவு – செலவுத் திட்ட முன்மொழிவை அங்கீகரிக்கக் கோரும் விசேட சபை அமர்வு நேற்று முன்தினம் இரவு மாநகர முதல்வர் தியாகராசா சரவணபவன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த அமர்வில் மாநகர பிரதி முதல்வர் கே. சத்தியசீலன் உட்பட மாநகரசபை ஆளும், எதிர்த் தரப்பு உறுப்பினர்கள், ஆணையாளர், பிரதி ஆணையாளர், பொறியியலாளர், கணக்காளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது வரவு – செலவுத் திட்ட முன்மொழிவு மாநகரசபை முதல்வரால் வாசிக்கப்பட்டுச் சபையின் அங்கீகாரத்துக்கு விடப்பட்டது. இதற்கு ஆதரவாக 26 வாக்குகளும் எதிராக 09 வாக்குகளும் அளிக்கப்பட்டமையுடன், இரண்டு வாக்குகள் நடுநிலையாகவும் இடப்பட்டிருந்தன.

அத்தடன் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உறுப்பினர் ஒருவர் சபை அமர்வில் கலந்து கொண்டிருக்கவில்லை. (ஐ)

# கோட்டாவின் குடியுரிமையைச் சவாலுக்கு உட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் முறையீடு!

கொழும்பு, நவ. 15

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவை இலங்கைக் குடிமகனாக ஏற்றுக் கொள்வதைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்கக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் உயர்நீதிமன்றில் மேன்முறையீட்டு மனு நேற்று முன் தினம் தாக்கல் செய்யப்பட்டது.

சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் காமினி வியாங்கொட, பேராசிரியர் சந்திரகுப்த தெனுவர ஆகியோர் சார்பில் இந்த மேன்முறையீட்டு மனு உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றின் பிரதம நீதியரசர் யசந்த கோதாகொட தலைமையிலான, நீதியரசர்கள் அர்ஜுன் ஒபேசேகர, மகிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய குழாம் முன்னிலையில் இந்த மனு கடந்த ஒக்ரோபர் 4ஆம் திகதி தள்ளுபடி செய்யப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்து வழங்கிய கட்டளையை ஆட்சேபித்து உயர் நீதிமன்றில் நேற்று முன் தினம் மேன்முறையீட்டு மனுத் தாக்கல் செய்யப்பட்டது. (ஐ)

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction,
Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

# கிளிநொச்சியில் 3 ஆஸ்பத்திரிகள் நாளை தேர்தலன்று இயங்காவாம்!



நாளை சனிக்கிழமை ஜனாதிபதித் தேர்தலன்று கிளிநொச்சியில் உருத்திரபுரம், தருமபுரம், பூநகரி, ஜெயபுரம் பிரதேச அரச வைத்தியசாலைகள் இயங்காதென அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

இதனால் அப்பகுதி மக்கள் வைத்திய சிகிச்சைக்காக கிளிநொச்சி நகரிலுள்ள பொது வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அங்கு பணியாற்றும் தென்னிலங்கை வைத்தியர்கள் வாக்களிப்பதற்காக மூன்று நாள் விடுமுறையில் செல்கின்றமையாலேயே இவ்வறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

தபால் மூல வாக்களிப்பிற்கு விண்ணப்பிக்காத நிலையில் அவர்கள் விடுமுறையில் செல்லவுள்ளமையால் இந்நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது.

# நம்பிக்கையுடன் ரஹானே



மீண்டும் இந்திய ஒருநாள் அணிக்கு திரும்ப முடியுமென, அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான அஜிங்யா ரஹானே நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

இந்திய ஒரு நாள் போட்டி அணிக்கு மீண்டும் திரும்ப முடியுமா என்று கேட்கிறீர்கள். நான் டெஸ்ட் போட்டிகளில் நன்றாக விளையாட வேண்டியது அவசியம்.

டெஸ்ட் போட்டியில் தொடர்ந்து ஓட்டங்கள் குவித்து சிறந்த பங்களிப்பை அளித்தால், அதன் மூலம் ஒரு நாள் போட்டிக்குத் திரும்ப முடியும் என்று உறுதியாக நம்புகிறேன். எல்லாமே தன்னம்பிக்கையில்தான் இருக்கிறது – என்றார்.

இந்திய டெஸ்ட் அணியின் துணை தலைவரான 31 வயதான அஜிங்யா ரஹானே, இறுதியாகக் கடந்த 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற தென்னாபிரிக்கா அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில் விளையாடினார்.

அத்தோடு ஒருகால கட்டத்தில் அணியில் நிலையான இடத்தை பிடித்திருந்த ரஹானே, முன்னதாக மந்தமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திவந்த காரணத்தினால், இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கிண்ண தொடருக்கான இந்திய அணியில் இடம்பெறவில்லை.

இதற்கு அவரது அண்மைக்கால மோசமான துடுப்பாட்டமே காரணம். இதனால் மன உளைச்சலுக்கு உள்ளான ரஹானே, இங்கிலாந்தில் நடைபெற்ற கவுன்ட்டி கிரிக்கெட் தொடரில் விளையாடி, பயிற்சி நுணுக்கங்களை கற்றுக்கொண்டு தன்னை சிறந்ததொரு வீரராக மாற்றிக் கொண்டு மீண்டும் அணிக்குள் மீள் பிரவேசிக்க எண்ணினார்.

இதன்படி, ஹம்ப்ஷைர் அணிக்காக விளையாடிய ரஹானே, தனது அறிமுக போட்டியிலேயே சதம் அடித்து சாதனை படைத்தார்.

இவ்வாறு சதம் அடித்ததன் மூலம், கவுன்டி கிரிக்கெட்டில் முதல் போட்டியிலேயே சதம் பதிவு செய்த மூன்றாவது இந்தியர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

அஜிங்கிய ரஹானே, இதுவரை 90 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 2,962 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதேபோல 62 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 3,975 ஓட்டங்களையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பந்தைத் சேதப்படுத்தியதால் மேற்கிந்திய வீரருக்குத் தடை

ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் பந்தை சேதப்படுத்திய மேற்கிந்தியத் தீவுகளின் வீரர் பூரனுக்கு ஐ.சி.சி. தடை விதித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி லக்னோவில் நடைபெற்றது. இந்தப் போட்டியின்போது களத்தடுப்பில் ஈடுபட்ட மேற்கிந்தியத்தீவுகளின் நிக்கோலஸ் பூரன் பந்தைப் பளபளப்பாக்கத் தொடைப்பகுதியில் தேய்த்தார். அப்போது கை பெருவிரலால் பந்தின் மேற்பகுதியைச் சேதப்படுத்தினார்.

இதையடுத்து நான்கு ரி - 20 போட்டிகளில் விளையாட பூரனுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# சுமதிபாலவுக்குச் சிக்கல்!

முன்னாள் இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் திலங்க சுமதிபால கடுமையான கிரிமினல் குற்றம் செய்தமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன எனச் சர்வதேச கிரிக்கெட் சபை இலங்கை அரசுக்கு தெரிவித்துள்ளது.



கிரிக்கெட்டில் ஊழல் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், இலங்கைக்கு அனுப்பப்பட்ட அறிக்கையில் ஐ.சி.சி. முக்கியமான தகவல்களை வெளியிட்டுள்ளது.

இந்தத் தகவல்கள் இலங்கை முன்னாள் கிரிக்கெட் சபைத் தலைவர் திலங்க சுமதிபாலவுக்கு சிக்கல் ஏற்படுத்தக் கூடும் என கூறப்படுகிறது.

சுமதிபாலவுடன் பல ஆண்டுகளாகப் பணியாற்றிய முன்னாள் ஆசோசகர் பிரித்தானியாவைச் சேர்ந்த க்ளின் போல்மர் வழங்கிய ஆதாரங்களின் அடிப்படையில் ஐ.சி.சியின் ஊழல் தடுப்புக் குழு இந்த அறிக்கையை உருவாக்கியுள்ளது.

க்ளின் போல்மர் கூறிய சில குற்றச்சாட்டுகள் இலங்கையில் கடுமையான குற்றச் செயல்களுக்கான சான்றுகளாக இருக்கலாம்.

அதை மறுபரிசீலனை செய்து, அத்தகைய ஆதாரங்களை இலங்கையில் உள்ள சட்டத்துறைக்கு அனுப்புவது குறித்து பரிசீலிக்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் என ஐ.சி.சி. இலங்கை அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளது.

ஆலோசகராக இருந்து போல்மர், தொலைக்காட்சி உரிமம், ஒப்பந்தங்கள் உள்ளிட்ட சட்டவிரோதமாகப் பெற்ற பணத்தை மறைத்துப் பதுக்குவதற்கான உதவியாளராக இருந்தார் எனக் கூறியுள்ளார்.

# மும்பையிலிருந்து டெல்லிக்கு மாறினார் ட்ரென்ட் போல்ட்!

இந்தியாவில் நடைபெறும் ரி – 20 கிரிக்கெட் திருவிழாவான ஐ.பி.எல். தொடரின், 13ஆவது அத்தியாயத்துக்கான தயார்படுத்தல்கள் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

2020ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடர் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடைபெறவுள்ளது. இந்த நிலையில், அடுத்த வருட ஐ.பி.எல். தொடருக்கான ஐ.பி.எல். ஏலம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி கொல்கத்தாவில் நடைபெறவுள்ளது.

2021ஆம் ஐ.பி.எல். ஏலத்தில் அனைத்து அணிகளும் 5 வீரர்களை மட்டும் தக்கவைத்துக் கொண்டு இதர வீரர்களை ஏலத்தில் மட்டுமே தேர்வு செய்யமுடியும். இதனால் இந்த வருட ஐ.பி.எல். ஏலம் முக்கியத்துவம் பெறுகிறது.

அடுத்த வருடப் பெரிய ஏலத்தை மனத்தில் கொண்டு இந்த வருட ஏலத்தில் வீரர்களை அணிகள் தேர்வு செய்யவுள்ளன.

2020ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடருக்கான தயார்படுத்தல்களை டெல்லி கப்பிட்டல்ஸ் அணி, கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி மற்றும் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகள் ஏற்கனவே தொடங்கிவிட்டன. இந்த அணிகள் புதிய பயிற்சியாளர்களைத் தற்போது நியமித்துள்ளன.

இதேவேளை, ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் இந்தப் போட்டித் தொடருக்கான எதிர்பார்ப்பு நீண்டுக் கொண்டே தான் செல்கின்றது.

இதற்கமைய 2020ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடர் தொடர்பான பல அறிவிப்புக்கள் வெளியாகிய வண்ணமுள்ளன.

அடுத்த மாதம் கொல்கத்தாவில் நடைபெறவுள்ள ஏலத்திற்கு முன் 8 அணிகளும் தங்களுடைய வீரர்களை மற்ற அணிகளுக்கு விற்றுக் கொள்ளலாம். மற்ற அணிகளிடம் இருந்து வீரர்களை வாங்கிக் கொள்ளலாம். இரண்டும் இல்லை என்றால், வீரர்களை விடுவிக்கலாம். இதற்கான காலக்கெடும் நேற்றுடன் முடிவடைந்தது.

இந்நிலையில் கடந்த தடவை டெல்லி கப்பிட்டல்ஸ் அணிக்காக விளையாடிய நியூஸிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் ட்ரென்ட் போல்ட்டை மும்பை இந்தியன்ஸ் அணி வாங்கியுள்ளது.

2014ஆம் ஆண்டு ஐபிஎல் தொடரில் அறிமுகம் ஆன ட்ரென்ட் போல்ட், 2018 மற்றும் 2019 சீசனில் டெல்லி அணிக்காக விளையாடினார்.

கடந்த சீசனில் டெல்லி அணியில் தென்னாபிரிக்காவின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் கார்கிஸோ ரபாடா விளையாடியதால், ட்ரென்ட் போல்ட்டால் விளையாடும் பதினொருவர் அணியில் நிலையாக இடம் பிடிக்க முடியவில்லை.

2019 சீசனில் ஐந்து போட்டிகளில் மட்டுமே விளையாடினார். ஒட்டுமொத்தமாக ஐ.பி.எல். தொடரில் 33 போட்டிகளில் விளையாடி 38 விக்கெட்டுக்கள் கைப்பற்றியுள்ளார்.

அதேபோல் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காக விளையாடி வந்த ராஜ்பூட், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு மாறியுள்ளது. இவர் 2018 சீசனில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கெதிராக 14 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து ஐந்து விக்கெட்டுக்கள் வீழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த ஆண்டு ஆஸ்திரேலியாவில் ரி – 20 உலகக்கிண்ண தொடர் நடைபெறவுள்ளதால், எதிர்வரும் ஐ.பி.எல். தொடர் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகின்றது.

கடந்த 12ஆவது ஐ.பி.எல் தொடருக்கான ஏலத்தில் தமிழக வீரர் வருண் சக்கரவர்த்தியை 8.40 கோடி ரூபாவுக்கு கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி எடுத்தது. அதேவிலைக்கு, ஜெய்தேவ் உனத்கட்டை ராஜஸ்தான் றோயல்ஸ் அணி ஏலத்தில் எடுத்தது.

இவர்கள் இருவரும் தான், கடந்த ஐ.பி.எல். ஏலத்தில் அதிக விலை போனவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள 12 ஐ.பி.எல். தொடர்களில், டெல்லி கேப்பிடல்ஸ் அணி, கிங்ஸ் லெவன் பஞ்சாப் மற்றும் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் ஆகிய அணிகள் சம்பியன் பட்டத்தை வென்றதே கிடையாது.

ராஜஸ்தான் றோயல்ஸ், டெக்கன் சார்ஜஸ் மற்றும் சன்ரைசஃஸ் ஹைதராபாத் அணிகள் தலா ஒருமுறையும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மூன்று முறையும், கொல்கத்தா அணி இரண்டு முறையும், மும்பை இந்தியன்ஸ் அணி நான்கு முறையும் சம்பியன் பட்டங்களை வென்றுள்ளன.



# முப்படைகளை முகாம்களுள் முடக்குவதற்கு அரசு முடிவு!

## ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்ப்பை அடுத்து

கொழும்பு, நவ. 15

வீதிச் சோதனை நடவடிக்கைகள் மற்றும் மேலதிக கடமைகளில் ஈடுபட்டுள்ள முப்படையினரை முகாம்களுக்குள் முடக்க அரசு தீர்மானித்துள்ளது.

தேர்தல் பணிகளுக்குத் தேவைப்பட்டால் மாத்திரமே முப்படையினர் பயன்படுத்தப்படவுள்ளனர்.

தேர்தல் காலத்தில் வீதிகளில் அநாவசியச் சோதனைகளில் முப்படையினர் ஈடுபடுவதால் மக்கள் அச்சமுறும் நிலைமை ஏற்படுமென்பதால் படைகளை முகாம்களுக்குள் முடக்குமாறு இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் விடுத்த கோரிக்கையையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று மாலை முதல் சனிக்கிழமை மாலை வரை முப்படையினர் முகாம்களில் உஷார் நிலையில் வைக்கப்படுவார்களென்றும் தேவைப்படின் அவர்களின் உதவிகளைப் பொலிஸ் மா அதிபர் கோரலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தேர்தல் விதிமீறல்கள் தொடர்பில் 3800 க்கும் மேல் முறைப்பாடுகள்

கொழும்பு, நவ. 15

ஜனாதிபதித் தேர்தல் விதி மீறல்கள் தொடர்பாக இதுவரை 3800க்கும் அதிகமான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, கடந்த மாதம் 8ஆம் திகதியில் இருந்து நேற்று பிற்பகல் மாலை 4.00 மணி வரை 3821 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 27 முறைப்பாடுகளும் தேர்தல் விதிமீறல்கள் தொடர்பாக 3687 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

நேற்று முன்தினம் மாத்திரம் 92 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும், அவை அனைத்தும் தேர்தல் விதிமீறல்கள் தொடர்பாகப் பதிவாகி யுள்ளன எனவும் தேர்தல்கள் ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

# இன்னொரு வாய்ப்பை எனக்குக் கொடுங்கள்

## றோயல் பார்க் கொலைக் குற்றவாளி கோரிக்கை

கொழும்பு, நவ. 15

2005 ஆம் ஆண்டில் இடம்பெற்ற றோயல் பார்க் கொலை சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டு தற்போது பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ள ஜுட் ஷிரமந்த ஜெயமஹ தனக்கு இரண்டாவது சந்தர்ப்பம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று அவர் வெளியிட்டுள்ள கடிதத்தில், ஒருபோதும் எவருக்கும் தீங்கு விளைவிக்க விரும்பவில்லை என்றும், நடந்ததற்கு வெட்கப்படுகிறார் எனவும் அவர் கூறியுள்ளார்.

நான் தவறு இழைத்தேன், அது ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது. ஆனால் நான் திருந்தியிருக்கிறேன். நான் திருந்தி வாழ ஒரு வாய்ப்பைத் தாருங்கள்.

எனது விடுதலை கடந்த 3 வருட காலம் பரிசீலிக்கப்பட்டு வந்தது. அது இப்போது எடுக்கப்பட்ட ஒரு முடிவல்ல. அத்தோடு அதில் எந்த அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை.

சிறைக்குள் இருந்து கல்வி கற்று கடந்த 15 வருட காலம் என்னை நான் வருத்தித் திருத்திக் கொண்டேன். யுவோனி என் மனதிலிருந்து நீங்கமாட்டார். அவரின் குடும்பத்திடம் பாவமன்னிப்பு கேட்க முயற்சித்தாலும் அதற்கு சாத்தியம் ஏற்படவில்லை எனக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2005 ஆம் ஆண்டு ராஜகிரியாவில் உள்ள றோயல் பார்க் வீட்டு வளாகத்தில், யுவோனி ஜான்சன் என்ற 19 வயதான சுவீடன்- இலங்கை வம்சாவளி யுவதியொருவர் அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து கீழே தள்ளி விழுத்திக் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட 34 வயதுடைய ஜுட் ஷிரமந்த ஜெயமஹவேயை பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்வதாக ஜனாதிபதி கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

அவரது இந்த முடிவு பொதுமக்கள், சில அரசியல்வாதிகள் மற்றும் பலர் மத்தியில் சீற்றத்தை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முன்னாள் புலி உறுப்பினரை விடுவித்த ஜேர்மன் நீதிமன்று

பேர்ளின், நவ. 15

போர்க்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளியொருவரை ஜேர்மன் நீதிமன்றமொன்று விடுதலை செய்துள்ளது.

முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 இராணுவத்தினரைச் சுட்டுக்கொன்று, தீமூட்டினார் என சிவதீபன் என்ற முன்னாள் போராளி மீது குற்றம்சாட்டப்பட்டு டூஸில்டோர்ப் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் நடந்து வந்தன.

2009 யுத்தம் முடிந்த சமயத்தில் சிவதீபன் ஜேர்மனிக்கு சென்றிருந்தார். அங்கு ஜேர்மனிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் மீது வழக்கு தொடரப்பட்டது.

அவர் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரமில்லாமையால் விடுவிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# யாழிலிருந்து கொழும்பு சென்ற இ.போ.ச. பஸ்ஸின் மீது கல்வீச்சு!

கொழும்பு, நவ. 15

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் மீது கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


சிலாபம் - புத்தளம் வீதியின் பங்கதெனிய - லுனுஓயா பாலத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இரவு இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் மூவர் காயமடைந்துள்ள நிலையில், சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்ததோடு, இந்தத் தாக்குதலில் பஸ்ஸின் கண்ணாடிகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளன.

ஓட்டோவில் பயணித்த சிலர் இந்தக் கல்வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என பஸ்ஸின் சாரதி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சிலாபம் ஊடாக பயணிக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் மற்றும் தனியார் பஸ்கள் மீது இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் கல்வீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனக் கூறப்படுகிறது. (ஐ)

# உண்ணாவிரதத்தை கைவிட்டார் தேரர்!



கொழும்பு, நவ. 1

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ இரட்டைக் குடியுரிமையைத் துறந்தமை தொடர்பான ஆவணங்களை வெளியிடக் கோரித் தேரர் ஒருவரால் முன்னெடுக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்கு வந்தது.

இந்தக் கோரிக்கையை முன்வைத்து இங்குவரட்டே சுமங்கல தேரர் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தார்.

இந்நிலையில் நேற்றுக் காலை அவர் தனது உண்ணாவிரதத்தை முடித்தார்.

பொலிஸாரின் அறிவுறுத்தலையடுத்தே, தேரர் நேற்றுக் காலை உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார்.

# பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் அறிமுகமாகும் குறுந்தகவல் சேவை

பாதுகாப்பு அமைச்சினால் குறுந்தகவல் சேவை ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் தொடர்பிலான சரியான மற்றும் உத்தியோகபூர்வமான தகவல்களைப் பொதுமக்களுக்கு உடனுக்குடன் வழங்கும் நோக்கில் இந்தக் குறுந்தகவல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போலி பிரசாரங்கள் தொடர்பிலும் மற்றும் அவசியமான தகவல்கள் தொடர்பிலும் இந்த சேவை மூலம் பொது மக்களுக்கு தெளிவுபடுத்தப்படும் என இராணுவ ஊடகப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

குறித்த குறுந்தகவல் சேவையை விசேடமாகச் செயற்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை எனவும் தொலைத் தொடர்புகள் ஆணைக்குழுவினூடாக அனைத்து தொலைபேசிகளுக்கும் குறித்த குறுந்தகவல் அனுப்பப்படும் எனவும் இராணுவ ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikathir



# பௌத்தத்தைப் பாதுகாக்க பாடுபட்டவர் மைத்திரிபால

## மகாசங்கத்தினர் பாராட்டு



கொழும்பு, நவ. 15

தூர நோக்குடன் செயற்படும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டின் முன்மாதிரிமிக்க அரச தலைவராவார் என மகாசங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

திரிபீடகத்தை உலக நினைவுப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கான விண்ணப்பத்தைத் தயாரிக்கும் நிபுணர் குழு, திரிபீடகத்தைப் பேணிப் பாதுகாக்கும் சபை, பௌத்த ஆலோசனை சபை, பௌத்த புலமைத்துவச் சபை, அகில இலங்கை சாசன பாதுகாப்புச் சபை ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் மகாசங்கத்தினருக்கும் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போதே மகாசங்கத்தினர் இவ்வாறு தெரிவித்துள்ளனர் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

திரிபீடகத்தை தேசிய மரபுரிமையாகப் பிரகடனப்படுத்தி அதனைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை நாட்டின் பௌத்த சாசனத்துக்காக ஜனாதிபதி மேற்கொண்ட ஒரு முக்கியமான பணி என மகாசங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

நாட்டின் பிரிவெனா கல்வியை மேம்படுத்துவதற்கும் ஜனாதிபதி முன்னெப்போதும் இல்லாத வகையில் பல பணிகளை மேற்கொண்டுள்ளார் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் உள்ள குறைந்த வசதிகளையுடைய விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்கும், அவற்றில் உள்ள பிக்குமார்களின் நலன் பேணலுக்காகவும் ஜனாதிபதி கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் விரிவான பல நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தார் என்றும் தேரர்கள் குறிப்பிட்டனர்.

திரிபீடகத்தை உலக நினைவுப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்காக அடுத்த கட்டச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காகவும் பௌத்த சாசனத்தின் பாதுகாப்புக்காகவும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. அகில இலங்கை சாசன பாதுகாப்புச் சபைக்கு ஜனாதிபதியினால் ஒரு கோடி நிதியுதவி வழங்கப்பட்டது.

# வெள்ளவாயவில் துப்பாக்கிச் சூடு

## ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 15

வெள்ளவாய சிறிபுர பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. இரு நபர்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டைத் தொடர்ந்து இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் 41 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன், சம்பவத்துடன் தொடர்புடைய நபர் தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# பௌத்த எழுச்சி நிதியத்தின் கீழ் 11 விகாரைகளுக்கு நிதி உதவி!

கொழும்பு, நவ. 15

குறைந்த வசதிகளைக் கொண்ட விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஜனாதிபதியின் வழிகாட்டலில் ஜனாதிபதி செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் பௌத்த எழுச்சி நிதியத்தின் கீழ் 11 விகாரைகளுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடந்தது.

ஜனாதிபதியின் எண்ணக்கருவின் பேரில் 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பௌத்த எழுச்சி நிதியத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் உள்ள குறைந்த வசதிகளைக்கொண்ட பெருமளவு விகாரைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரையின்பேரில் முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பொறியியலாளர்களின் ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காணி சம்பந்தமான பிரச்சினைகள் உள்ள விகாரைகளுக்கு காணி உறுதிகளை வழங்கி அந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். (ஐ)

# தேர்தல் பணிக்கு 1300 பஸ்கள்

*கொழும்பு, நவ. 15*

*எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் பணிகளுக்காகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கோரிக்கையை ஏற்று இலங்கைப் போக்குவரத்துச் சபை 1300 பஸ்களை வழங்கவுள்ளதாக போக்குவரத்துச் சபையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ)*



வடமாகாண

# மரநடுகை மாதம்

கார்த்திகை 1 - 30, 2019

**கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல, தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்**



மாண்ட வீரர் கனவு பலிக்க
மழையின் பொழிவில் தமிழ் மண் குளிக்க...

ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

TAMIL NATIONAL GREEN ORGANIZATION


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.11.2019 இல் வெளியிடப்பெற்றது.